
குங்குமச்
சிமிழ்
1-10-2008
விலை ரூ.4
நினைவெல்லாம் நீயே
- லட்சுமிபிரபா

TECHSATISH.NET TECHSATISHFAN

# அலிபாபா

பிரகாஷ்ராஜ் புத்திசாலித்தனமாகத் திருடுவதில் வல்லவர். பூட்டியிருக்கும் வீட்டுக்குள் நுழைந்து, சர்வ நிதானமாகச் சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு, அகப்பட்டதைச் சுருட்டிச் செல்லும் அழுத்தமான மனிதர்.

பஸ்ஸில் பிக்பாக்கெட் அடிப்பது எப்படி, வங்கியில் பணம் எடுக்க வருவோரின் கவனத்தைத் திசை திருப்பி, பணப்பையை அபேஸ் செய்வது எப்படி, திருடிவிட்டு அந்தப் பழியை மூன்றாவது ஆள் மீது போடுவது எப்படி என்றெல்லாம் மகனுக்கே பாடம் நடத்துபவர் பிரகாஷ்ராஜ்.

அவருடைய புதல்வன் கிருஷ்ணா (அறிமுக நாயகன்) சிறிய திருட்டுகள் பலவற்றில் ஈடுபட்டாலும், அதைப் பிடிக்காமல்தான் செய்கிறார். வங்கியில் பணிபுரியும் ஜனனியின் ஸ்கூட்டரைத் திருடிவிட்டு, அவரிடம் மனதைப் பறிகொடுக்கிறார். மகன் கிருஷ்ணா நல்லபடியாக, விருப்பம் போல் வாழ வேண்டும் என்றுதான் பிரகாஷ்ராஜ் எண்ணுகிறார். ஆனால், எதிர்பாராத விதமாகப் பெரும் குற்றச்சாட்டுக்கு ஆளாகிச் சிறை செல்கிறார். மகனைக் காப்பாற்றும் முயற்சியில் பிரகாஷ்ராஜ் உயிரிழக்கிறார்.

தந்தையைக் கொன்றவர்களைத் தேடிப் பிடித்துப் பழிவாங்கும் முயற்சியில் கிருஷ்ணா இறங்குகிறார்.

போலீஸ் கமிஷனர்தான் கிருஷ்ணாவை மாட்டிவிட்டார் என்று சந்தேகம் எழும்போது, வேறு ஒரு போலீஸ் அதிகாரிதான் சதிகாரர் என்று எண்ண வைக்கிறது சம்பவங்கள். பிறகு அவர் இல்லை, அரசியல்வாதி ராதாரவிதான் இவ்வளவுக்கும் காரணம் என்று நம்புகிறோம்.

எதிர்பாராத மர்மக் கொலைச் சம்பவங்கள் ஏராளம் நிகழ்கின்றன. இறுதியில் கமிஷனரின் மாமனார் திலகன்தான் கொடூரமான காமலீலைகளைச் செய்த குற்றவாளி என்பது தெரிகிறபோது வியந்து போகிறோம்.

கிருஷ்ணா, சாமர்த்தியமான திருடன் இல்லையென்றாலும், ரசிகர்களின் மனதைக் கொள்ளையடித்து விடுகிறார்.

இயக்குநர் நீலன்.கே.சேகர், விறுவிறுப்பான திரைக்கதையுடன் அலிபாபாவை வெற்றிப் படமாக்கியிருக்கிறார்.

- பவானி மைந்தன்



முழுநாவல்

# நினைவெல்லாம் நீயே

## ▭ லட்சுமிபிரபா

இருள் விலகத் தொடங்கும் செந்தூர வானம். தோட்டத்து மாமரத்திலிருந்த சிறு கூட்டுக்குள் குருவிகள் தங்களுக்குள் ரகசியம் பேசிக்கொண்டிருந்தன.

தியானம் செய்து முடித்து விட்டு எழுந்த இனியா ஜன்னலைத் திறந்தாள். தோட்டத்து மலர்களைத் தன் பார்வையால் வருடிக் கொடுத்து விட்டு... பாத்ரூமுக்குள் புகுந்தாள்.

பத்து நிமிடங்களில் குளித்து முடித்து சாம்பல் நிற ஆர்கண்டி காட்டன் புடவையைக் கட்டிக் கொண்டு வெளிப்பட்டாள்.

நீண்ட கூந்தலைத் தளரப் பின்னிக் கொண்டே... கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தை ஏறிட்டாள்.

நீள்வட்ட முகம், கூர்மூக்கு, அகன்ற கண்கள், லிப்ஸ்டிக் தீற்றாமலேயே இயற்கையாய் சிவந்திருந்த மெல்லிய இதழ்கள்... சங்கு கழுத்து, கட்டான தேகம்... தந்தத்தைக் கடைந்தாற் போன்ற நிறம், நீண்ட கூந்தல் என்று பேரழகியாய் மிளிர்ந்தாலும்... துளி கர்வம் கூட அவளுக்குள் தலைகாட்டியதில்லை.

மாடியறையை விட்டுக் கீழே இறங்கி வந்த இனியா... ஃப்ரிஜ்ஜைத் திறந்து பிளாஸ்டிக் டப்பாவில் சிறு பந்தாகச் சுருட்டி வைத்திருந்த ஒரு முழம் மல்லிகைப் பூவை எடுத்துக் கூந்தலில் சூட்டிக் கொண்டாள்.

ஹாலின் வலது பக்கத்திலிருந்த பூஜையறைக்குள் புகுந்தாள். பெரிய வெள்ளிக் குத்துவிளக்கை ஏற்றி வைத்து, சாம்பிராணி ஊதுவத்தியைக் கொளுத்தி... தோட்டத்தில் மலர்ந்திருந்த பவளமல்லிப் பூக்களை ஸ்வாமி



படங்களுக்கு அடியில் போட்டுவிட்டு நிமிர்ந்தாள்.

அப்பா சிவராமன் குளித்து முடித்து நெற்றியில் பட்டையாக விபூதியைப் பூசிக் கொண்டு பக்திப்பழமாகப் பூஜையறைக்குள் நுழைந்தார்.

கண்களை மூடிப் பூஜையறையில் அமர்ந்து விட்டால்... அரைமணி நேரம் கழித்து தான் வெளியில் வருவார். பூஜையறையை விட்டு வெளிப்பட்ட இனியா, எதிர்ப்புற சுவரில் மாட்டப்பட்டிருந்த அம்மா மீனாட்சியின் புகைப்படத்தருகே வந்து நின்றாள்.

டவலால் தூசு போக படத்தைத் துடைத்த இனியாவின் அழகிய விழிகளில் கண்ணீர் ஊற்றெடுத்தது.

நான்கு வருடங்களுக்கு முன்பு வரை... இந்த பங்களாவில் ஆனந்தம் விளையாடிக் கொண்டிருந்தது.

அப்பா சிவராமன், அம்மா மீனாட்சி அண்ணன் ரகுராமன் இனியா ஆகியோர் கவலையின் சுவடு அறியாமல்... மகிழ்ச்சியில் திளைத்திருந்த நாட்களை எண்ணிப் பார்க்கும் போது... நெஞ்சுக்குள் ஏக்கம் கிளை விட்டுப் படர்ந்தது.

யார் கண்பட்டதோ தெரியவில்லை... அவர்களது மட்டற்ற மகிழ்ச்சியில் மண் விழுந்துவிட்டது.

என்றைக்கு ரகுராமன் பெற்றவர்களுக்குத் தெரியாமல்... ஒரு வடநாட்டுப் பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடி காதல் கல்யாணம் செய்து கொண்டு... மாலையும் கழுத்துமாக வீட்டிற்குள் அடி எடுத்து வைத்தானோ... அந்த கணத்திலேயே குடும்பத்தின் குதூகலம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது.

மீனாட்சிக்கு ரகுவின் மீது அலாதிப் பிரியம்.

சொல்லாமல் கொள்ளாமல் அவன் இப்படியொரு காரியத்தை செய்வான் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை.

சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருக்கும் சிவராமனுக்கு மகன் ரகு இப்படியொரு தலைக் குனிவை ஏற்படுத்திவிட்டானே? என்று மீனாட்சி குமுறி அழுதார்.

அந்த அதிர்ச்சியே அவருக்கு எமனாகி மாறி விட்டது.

மறுதினமே மீனாட்சிக்கு மாரடைப்பு வந்து... மண் உலகை விட்டு

மறைந்து விட்டார்.

மனைவியின் உயிருக்கு உலை வைத்த மகன் ரகுவை எண்ணிக் கொதித்துப் போனார். அவருக்கு 'நெற்றிக்கண்' திறந்து கொண்டது.

அவருக்கு கோபம் வந்தால் மற்றவர்களைப் போல்... தாம்தூம் என்று குதிக்க மாட்டார். கண்கள் கோவைப் பழமாய் சிவக்க... தாடை இறுக முகத்தில் தீப்பொறி பறக்க ஒரு பார்வை பார்த்தால் போதும்!

"கூடுவாஞ்சேரியில இருக்கிற பாக்டரியையும் அதையொட்டி நான் கட்டி வைச்ச பங்களாவையும் உனக்கு தர்றேன். உன்னைப் பெத்து தொலைச்ச பாவத்துக்கு தான்... இவைகளை நான் தரேன். இது நான் சுயமா சம்பாதிச்சது. மத்தபடி சிட்டியில இருக்கிற மத்த நிறுவனங்களும், ஆசையா சொத்துகளும் இனியாவுக்குத் தான்! இனிமே என் முகத்திலேயே முழிக்காதே. பெத்தவங்களோட மனசை சாகடிச்ச பசங்க உருப்பட்டதா... சரித்திரமே கிடையாது. இந்தா டாக்குமெண்ட்... இனிமே எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த வீட்டுக்குள்ளே அடியெடுத்து வைக்காதே"

தணிந்த குரலில் பேசிவிட்டு... படக்கென்று தனது அறைக்குள் புகுந்து கொண்டார் சிவராமன்.

சேலைத் தலைப்பால் வாயை மூடிக் கொண்டு, அண்ணன் ரகு மனைவியுடன் தலைகுனிந்தபடி வெளியேறிச் செல்வதைப் பார்த்து... மௌனமாகக் கண்ணீர் உகுத்தாள் இனியா.

"அம்மா! இனியா, அம்மா"

மீனாட்சியின் புகைப்படத்தில் பார்வையைப் பதித்திருந்த இனியா சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

"பூ வாங்கிட்டு வந்திருக்கேன்" வேலைக்காரன் நீட்டிய பையிலிருந்த அந்த மல்லிகைச் சரத்தை எடுத்து மீனாட்சியின் படத்திற்குச் சூட்டினாள்.

பூஜை முடிந்து வந்ததும் அப்பாவுக்கு... பனை வெல்லம் போட்ட காபி சூடாகத் தயாராக இருக்க வேண்டும்.

வீட்டில் சமையலுக்கு ஆள் இருந்தும்... அப்பாவுக்கு தன் கையால் காபி போட்டுத் தருவதில் இனியாவுக்கு அலாதி சுகம் தான்!

மகள் கலந்து தரும் காபியை மெல்ல உறிஞ்சிக் கொண்டே... தினசரியைப் புரட்டுவது அவர் வழக்கம்!

கடந்த மாதம் திடீரென்று அவருக்கு 'மைல்ட் அட்டாக்' ஏற்பட்டு பிழைத்து வந்திருந்தார். காபிக்கு பதிலாக ஓட்ஸ் கஞ்சிதான் அவர் அருந்த வேண்டும் என்று குடும்ப மருத்துவர் உத்தரவிட்டு விட்டார்.

ஓட்ஸ் கஞ்சியைக் காய்ச்சிக் கொண்டிருந்தவள்... தீவிர யோசனையில் மூழ்கினாள்.



ஐம்பது வயதான பாப் பாடகி மடோனா தன்னுடைய கணவரோடு இணைந்து குழந்தைகளுக்கான படம் ஒன்றை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்.
- க.ரவீந்திரன்

கட்டுமஸ்தான உடம்புக்குச் சொந்தக்காரர் சிவராமன். காலை மாலைகளில் தவறாமல் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று பெற்ற மக்களுக்கு புத்தி புகட்டுபவர்.

சென்ற மாதம் வரை... கடற்கரையில் வெகுநேரம் வாக்கிங் செய்து விட்டு வருபவர்.

அவருக்குப் போய் மாரடைப்பு வந்துவிட்டதை எண்ணி... இனியா மிகவும் கலங்கிப் போனாள்.

ரகுவால் ஏற்பட்ட அவமானம்... மீனாட்சியின் திடீர் மரணம்... இவற்றையெல்லாம் நாளடைவில் ஜீரணித்து வாழப் பழகிக் கொண்டுவிட்டாரே அப்பா சிவராமன்?

டாக்டர் கூட அவளிடம் அதைத்தானே கேட்டார்?

“என்னம்மா... அப்பாவுக்கு என்ன பிராப்ளம்? அளவுக்கு அதிகமா டென்ஷன்

பட்டாரா? உங்க அண்ணன் திடீர்னு வீட்டுக்கு வந்து ஏதாவது பிரச்சினை பண்ணினானா? எதையோ நினைச்சு ரொம்ப கவலைப்பட்டிருக்கணும். அதான் இப்படி ஆயிருக்கு. கவலைப்படாதே... பகவான் இருக்கார்."

"அங்கிள்! ரகு அண்ணாவால எந்தப் பிரச்சினையும் இல்ல... பிஸினஸும் நல்லாத்தான் போயிட்டிருக்கு... அவர் டென்ஷன் படறதுக்கு வாய்ப்பே இல்ல... அவர் கவலைப்படும்படியா... எந்த விஷயமும் புதுசா நடக்கலை அங்கிள்"

கலங்கிய கண்களுடன் மலங்க விழித்தபடி அன்று அவள் பதில் கூறியது... இன்று நினைவுக்கு வந்தது.

நாற்பது நாட்களுக்கு முன்புதான்... இனியாவுக்கும், சுந்தருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

சிவராமனின் கடைசி தங்கை சரோஜாவின் மகன் தான் சுந்தர்.

தனது நண்பர்கள், உற்றார் உறவினர்கள் என்று அனைவரையும் அழைத்து... அந்த நிச்சயதார்த்தத்தை மிகவும் விமரிசையாக நடத்தினார் சிவராமன். ஆனால் மறுதினமே அவர் முகம் பேயறைந்தாற்போல் இருண்டு விட்டது.

"என்னப்பா? ஒரு மாதிரியா இருக்கீங்க? உடம்பு சரியில்லையா அப்பா?" இனியா பதறிப்போய் பலமுறை கேட்டும்... அவர் மழுப்பலாகவே பதில் சொன்னார்.

"லேசா தலை வலிக்கிறாப்பல இருக்கு... வேற ஒண்ணுமில்லைம்மா" இல்லை... அப்பா பொய் சொல்கிறார்... காய்ச்சல், தலைவலி என்று சோர்ந்து விடும் ரகம் அல்லவே?

ஏதோ நடந்திருக்கிறது... என்னவாக இருக்கும்?' உள்ளூர பலவும் எண்ணி அவள் குழம்பிப் போனாள்.

புதிய கவலை அவரை வாட்டி வதைத்து 'மைல்ட் அட்டாக்' என்று மரணத்தின் விளிம்பு வரை தள்ளியிருக்கிறதே? அவர் மனதில் ஊசி முள்ளாய் உறுத்தும் விஷயம் என்னவாக இருக்கும்? இதே ரீதியில் அவர் மன உளைச்சல் பட்டால்... மீண்டும் ஒரு அட்டாக் வந்துவிடுமே?

இனியாவின் தலைக்குள் வண்டு குடைந்தது.

"மேடம்! இன்றைய புரொடக்ஷன் டார்கெட் லிஸ்ட் கேட்டீங்களே? இங்கே வைக்கிறேன் மேடம்"

கம்ப்யூட்டர் திரையில் பார்வையைப் பதித்து மவுஸை நகர்த்திக் கொண்டிருந்த இனியா... மெல்ல தலையாட்டினாள்.

கிளார்க் சண்முகம் ஃபைலை வைத்துவிட்டு பவ்யமாய் வெளியேறியதும்... சுழல் நாற்காலியை மெல்லத் திருப்பி மேஜை மீது வைக்கப்பட்ட அந்த ஃபைலை எடுத்துப் புரட்டினாள்.

'மீனாட்சி ஃபேப்ரிகேஷன்ஸ் லிமிடெட்'... அனைத்து ரக சில்வர் மற்றும் பித்தளைப் பாத்திரங்கள், பிளாஸ்டிக் சாமான்கள், அலுமினியப் பாத்திரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம்...'

அப்பா சிவராமனின் முப்பது வருட கால அயராத உழைப்பினால்... பல்கிப் பெருகி இப்போது நகரத்தில் பல இடங்களில் தனது கிளைகளைப் பரப்பிக் கொண்டு நின்றது.

கடந்த ஒரு மாத காலமாக சிவராமனால் அலுவலகத்திற்குள் அடியெடுத்து வைக்க முடியவில்லை.

'பரிபூரண ஓய்வில் இருக்க வேண்டும்' என்றும் 'எந்தக் காரணத்தைக் கொண்டும் இப்போதைக்கு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டாம்' என்று டாக்டரும் நண்பருமான தேவசகாயம் அவருக்கு எச்சரித்து விட்டிருந்தார்.

"இப்படி ஏதாவது நடக்கும்னு தான்... நான் ஏற்கெனவே இனியாவை நல்லா ட்ரெயின் பண்ணிட்டேன். கடந்த வருடம் அவ எம்.பி.ஏ. முடிச்சதுமே... நிர்வாகப் பொறுப்பைத் தலையில கட்டிட்டேனே? அவளுக்கு கற்பூர புத்தி. எதையும் டக்குனு பிடிச்சுப்பா... கிட்டயே இருந்து அவ்வப்போது ஆலோசனை சொல்லிட்டிருந்தேன். இனி அதுகூட தேவையில்லை. அவ மேல எனக்கு பரிபூரண நம்பிக்கை வந்தாச்சு தேவசகாயம்! இனிமே நான் ஆபீசுக்குப் போகலை. போதுமா?"

வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் அவர் தீனமான குரலில் முணுமுணுத்தது... இன்றளவும் இனியாவின் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டுதான் இருந்தது.

அப்பா சிவராமன் தங்கமான குணம் படைத்தவர். அலுவலகத்தில் பணிபுரியும் அத்தனை தொழிலாளர்களும் அவரைத் தங்களது தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவார்கள்.

அவர் மிகவும் இளகிய மனம் படைத்தவர்தான். மீனாட்சியின் சாவுக்கு ரகு காரணமாகிவிட்டான் என்ற அதீத கோபத்தில்... ரகுவை வீட்டை விட்டுத் துரத்தி, பாராமுகமாக மனம் இறுகிப் போய் தான் கிடந்தார்.

அதற்கு அடுத்த வருடமே ரகுவின் மனைவி இந்திரா பெண் குழந்தையை ஈன்றெடுத்து விட்டாள் என்று கேள்விப்பட்டதுமே... பாறையாய் இறுகிக் கிடந்தவரின் மனம்... மெல்ல இளகியது.

"அ... அப்பா! அண்ணனுக்கு பெண் குழந்தை பிறந்திருக்காம்... அப்படியே அச்சு அசலா ஜாடையில் நம்ம அம்மாவை உரிச்சுட்டு வந்திருக்காம்... அண்ணா எனக்கு ஃபோன் பண்ணி சொன்னான்பா" தயங்கியபடி இனியா அப்பாவை ஏறிட்டாள்.

"அ... அப்படியா?"

"ஆமாம்பா... அம்மாவே திரும்பவும் வந்து பிறந்திருக்காங்கன்னு என் மனசுக்கு தோணுது அப்பா"

விசுக்கென்று அவளை ஊன்றிப் பார்த்தார்.

மறுநாள் காலையில்...

பூஜையறைக்கு வந்தவர் "இனியா! நம்ம லாயர் கிட்டப் பேசி ஏற்பாடு பண்ணச் சொல்லிட்டேன். ரகுவுக்கு சேர வேண்டிய பாதி சொத்தைப் பிரிச்சு... அதை அவனோட குழந்தைக்குப் போய்ச் சேரணும்னு எழுதச் சொல்லிட்டேன்.

இப்போ உனக்கு திருப்தி தானே? என்ன அப்படி பார்க்கிறே? ரகுவுக்கு கொஞ்சம் கை ஓட்டை. தாம் தூம்னு செலவழிக்கிற ரகம்... அதான் பாப்பா வளர்ந்து மேஜரானதும் அவளுக்கு அது சேர்ந்துடணும்னு எழுதியாச்சு. அதுவரைக்கும் சொத்துக்கு அவன் கார்டியனா இருக்கட்டும்... என்ன சொல்றே?" என்று கேட்டுவிட்டுப் புன்னகைத்தார்.

"நீங்க எது செஞ்சாலும்... அது ரொம்ப சரியாகத்தான் இருக்கும். இப்பத்தான் மனசுக்கு நிம்மதியா இருக்குப்பா" நீண்ட பெருமூச்செறிந்தாள் இனியா.

சிவராமன் இறங்கி வந்துவிட்டார் என்றாலும்... ரகுவுக்கு குற்ற உணர்வு

அப்பா சிவராமன் தங்கமான குணம் படைத்தவர். அலுவலகத்தில் பணிபுரியும் அத்தனை தொழிலாளர்களும் அவரைத் தங்களது தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவார்கள்.

அவர் மிகவும் இளகிய மனம் படைத்தவர்தான். மீனாட்சியின் சாவுக்கு ரகு காரணமாகிவிட்டான் என்ற அதீத கோபத்தில்... ரகுவை வீட்டை விட்டுத் துரத்தி, பாராமுகமாக மனம் இறுகிப் போய் தான் கிடந்தார்.

அதற்கு அடுத்த வருடமே ரகுவின் மனைவி இந்திரா பெண் குழந்தையை ஈன்றெடுத்து விட்டாள் என்று கேள்விப்பட்டதுமே... பாறையாய் இறுகிக் கிடந்தவரின் மனம்... மெல்ல இளகியது.

"அ... அப்பா! அண்ணனுக்கு பெண் குழந்தை பிறந்திருக்காம்... அப்படியே அச்சு அசலா ஜாடையில் நம்ம அம்மாவை உரிச்சுட்டு வந்திருக்காம்... அண்ணா எனக்கு ஃபோன் பண்ணி சொன்னான்பா" தயங்கியபடி இனியா அப்பாவை ஏறிட்டாள்.

"அ... அப்படியா?"

"ஆமாம்பா... அம்மாவே திரும்பவும் வந்து பிறந்திருக்காங்கன்னு என் மனசுக்கு தோணுது அப்பா"

விசுக்கென்று அவளை ஊன்றிப் பார்த்தார்.

மறுநாள் காலையில்...

பூஜையறைக்கு வந்தவர் "இனியா! நம்ம லாயர் கிட்டப் பேசி ஏற்பாடு பண்ணச் சொல்லிட்டேன். ரகுவுக்கு சேர வேண்டிய பாதி சொத்தைப் பிரிச்சு... அதை அவனோட குழந்தைக்குப் போய்ச் சேரணும்னு எழுதச் சொல்லிட்டேன்.

இப்போ உனக்கு திருப்தி தானே? என்ன அப்படி பார்க்கிறே? ரகுவுக்கு கொஞ்சம் கை ஓட்டை. தாம் தூம்னு செலவழிக்கிற ரகம்... அதான் பாப்பா வளர்ந்து மேஜரானதும் அவளுக்கு அது சேர்ந்துடணும்னு எழுதியாச்சு. அதுவரைக்கும் சொத்துக்கு அவன் கார்டியனா இருக்கட்டும்... என்ன சொல்றே?" என்று கேட்டுவிட்டுப் புன்னகைத்தார்.

"நீங்க எது செஞ்சாலும்... அது ரொம்ப சரியாகத்தான் இருக்கும். இப்பத்தான் மனசுக்கு நிம்மதியா இருக்குப்பா" நீண்ட பெருமூச்செறிந்தாள் இனியா.

சிவராமன் இறங்கி வந்துவிட்டார் என்றாலும்... ரகுவுக்கு குற்ற உணர்வு

செல்லாக அரித்ததால்... அவனால் சகஜமாக வீட்டிற்கு அடிக்கடி வர முடியவில்லை.

அத்தி பூத்தாற் போல் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வருபவன்... அப்பாவும் இனியாவும் குழந்தையை தூக்கிக் கொஞ்சுவதை தாடை இறுக மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு... சிறிது நேரத்தில் ஏதாவது சாக்குபோக்கு சொல்லிக் கொண்டு குழந்தையுடன் வெளியேறி விடுவான்.

"பெத்தவ மனசை நோகடிச்சு சீக்கிரமா சாகடிச்சுட்டோம்னு அவனுக்கு குற்ற உணர்வு! அதான் பயல் ஓடறான். கண்டுக்காதே" என்று சிவராமன் இனியாவுக்கு ஆறுதல் கூறித் தேற்றுவாரே?

சுந்தருக்கு அவளைப் பேசி முடிக்கும் முன்... அவளது விருப்பு வெறுப்புக்கு மதிப்பளித்து அவர் எவ்வளவு இதமாகப் பேசினார்!



"சரோஜா தினமும் என் உயிரை எடுக்கிறா இனியா... ஏதாவது நல்ல முடிவா சொல்லுங்கண்ணா... அப்படின்னு கேட்டுட்டே இருக்கா... அவ உனக்கு சொந்த அத்தை. சுந்தர் பயலும் பார்க்கப் பதவிசா பணிவா இருக்கான். அண்டை அசலார் வீட்டிலே உன்னைக் கொடுத்துட்டு... நான் கவலைப்பட்டுட்டு இருக்கிறதை விட... இங்கே கொடுத்தோம்னா... எனக்கும் நிம்மதி! உனக்கும் நிம்மதி!

உனக்கு இதிலே விருப்பந்தானே இனியா? மாற்றுக் கருத்து ஏதாவது இருந்தா...

**ஹா**லிவுட் நடிகை ஸ்கர்லேட் தனது திருமணத்தை ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை தள்ளி வைத்துள்ளார். இவரது இரட்டைச் சகோதரர்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஒசாமாவிற்கு தேர்தல் பிரச்சாரம் செய்வதால் இந்த முடிவை எடுத்துள்ளாராம். தேசப்பற்று என்றால், இப்படியல்லவா இருக்க வேண்டும்!

- க.ரவீந்திரன்

வெளிப்படையா சொல்லிடும்மா... அதில தப்பில்லை. சொல்லும்மா"

"ஐயோ... என்னப்பா இது? உங்க இஷ்டம் அப்பா. நான் உங்க பொண்ணு. நீங்க எனக்கு நல்லது தானேப்பா செய்வீங்க?" என்று அவள் பதில் கூறியதும்... சிவராமனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியில் கண்கள் பனித்தன.

"ரொம்ப சந்தோஷம்டா! ஊர் உலகம் மெச்சறாப்பல ஜாம் ஜாம்னு நடத்தப் போறேன். உங்கம்மா இருந்திருந்தா ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பா" பேசியபடி கண்களில் துளிர்த்த கண்ணீரை மேல் துண்டால் துடைத்துக் கொண்டார்.

நிச்சயதார்த்தம் நடந்து முடியும் வரை... அவரது முகத்தில் எந்தக் குழப்பமும் இல்லை... எந்தக் கவலையும் இல்லையே?

அதற்குப் பின்பு ஏதோ நடந்திருக்கிறது.

அது என்னவாக இருக்கும்?

அதை எப்படிக் கண்டுபிடிப்பது?

அப்பாவிடமே வெளிப்படையாகக் கேட்டு விட்டால் என்ன? ஊகூம்! அப்பாதான் அன்றைக்கு எதையோ கூறி மழுப்பி விட்டாரே?

அவர் ஒரு விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால்... அது அவ்வளவுதான்! என்ன தான் தலைகீழாக நின்று பார்த்து மன்றாடினாலும்... அவரிடமிருந்து விஷயத்தைக் கறக்கவே முடியாது.

ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தவளின் மனம் குட்டையாய் குழம்பியது.

மனம் வேலையில் ஈடுபட மாட்டேன் என்று அடம் பிடித்தது.

"ட்ரிங்... ட்ரிங்"

ரிசீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தாள்.

"மேடம்! யாரோ ஒரு லேடி... பேரு ராதாவாம். உங்ககிட்ட முக்கியமான விஷயம் பேசணும்னு சொல்றாங்க... லைன் கொடுக்கட்டுமா?" ரிசப்ஷனிஸ்ட் அவளது அனுமதிக்காக மறுமுனையில் காத்திருந்தாள்.

'யார் அவள்? ராதாவா?'... புருவங்கள் முடிச்சுப் போட ஒரு கணம் யோசித்துவிட்டு...

“சரி! லைன் கொடுங்க” என்றாள். சில விநாடிகளில்...

“ஹலோ! வணக்கம் இனியா மேடம்! நான் ராதா பேசறேன். உங்க சுந்தரோட அஞ்சு வருஷமா நெருங்கிப் பழகின காதலி.

கடந்த அஞ்சு வருஷமா நான்தான் அவருக்கு இனியவளா இருந்தேன். இப்போ கசந்து போயிட்டேன்”

“எ... என்ன சொல்றீங்க?”

“உண்மையைத்தான் சொல்றேன். நீங்க அவருக்கு மனைவியானா... ரொம்பவே பாதிக்கப்படுவீங்க. உங்க வாழ்க்கையே பாழாயிடும். ஏன்னா... சுந்தர் ஒரு வுமனைசர். எஸ்! லேடீஸ் விஷயத்துல ரொம்ப வீக். எங்கேஜ்மெண்ட் தானே முடிஞ்சிருக்கு? கல்யாணத்தை உங்கப்பா கிட்ட சொல்லி நிறுத்திடுங்க... இல்லேன்னா... வாழ்நாள் முழுவதும் கண்ணைக் கசக்கிட்டிருப்பீங்க...”

மேற்கொண்டு அவள் பேசியது எதுவும் இனியாவின் செவிகளில் விழவில்லை. ஏ.ஸி. அறையிலும் குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

கைகள் நடுங்கி ரிசீவர் நழுவியது. அடி வயிற்றில் ஒரு பயப் பந்து வேகமாய் உருண்டது.

## 3

அடையாறு, பாலாஜி நகரில் புதிதாகத் திறக்கப்பட்ட சூப்பர் மார்க்கெட் அது. ஏதோ ஒரு சோப்பு பவுடருடன் இனாமாக ஒரு பிளாஸ்டிக் பாத்திரம் கொடுக்கப்படும் என்று விளம்பரப்படுத்தியிருந்ததினால்... பெண்கள் கூட்டம் எக்கச்சக்கமாக இருந்தது.

கார்களும், ஸ்கூட்டர்களும், மனிதர்கள் ஏக காலத்தில் பேசும் சத்தமும் கலந்து ஒரு சந்தைக் கடை போல... ஒரே இரைச்சல் மயமாய் இருந்த கடைக்குள் நுழைந்தான் தீபன்.

சூப்பர் மார்க்கெட்டின் உள்ளே பல குழல் விளக்குகள் பளிச்சென்று எரிந்து... ஜெகஜ் ஜோதியாய் தென்பட்டது.

தனது பெரிய பையை முன் பக்கம் கொடுத்து ஒரு டோக்கன் வாங்கிக் கொண்டு... கடையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு பிளாஸ்டிக் கூடையை எடுத்துக் கொண்டு, உட்புறம் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்தபடி வந்தான்.

சாமான்களை வாங்கி முடித்துக் கொண்டு... பில்லை வாங்கி சரி பார்த்தபடியே அந்தப் பெரிய பையுடன் கடை வாசலை விட்டு இறங்கினான் தீபன்.

இருபதடி தூரத்தில் நிறுத்தியிருந்த 'ஷேர் ஆட்டோவில் பின் இருக்கையின் பின்னால் பெரிய பையை வைத்து விட்டு... டிரைவிங் சீட்டில் அமர்ந்து ஆட்டோவைக் கிளப்பினான் தீபன்.

ஆட்டோவை சீரான வேகத்தில் செலுத்திய தீபனுக்கு சுமார் இருபத்தெட்டு வயதிருக்கலாம். சிவந்த நிறம், களையான முகம் என்று பார்ப்பதற்கு பளிச்சென்ற தோற்றத்துடன் அம்சமாக இருந்தான்.

படிய வாரியிருந்த கேசமும், நெற்றியில் கீற்றாக இட்டிருந்த விபூதியும்... அவனை ஒரு பண்பான, பணிவான இளைஞன் என்று பறைசாற்றிக் கொண்டிருந்தன.

நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவன் தான் தீபன். எம்.காம் படித்தவன். சில கம்ப்யூட்டர் கோர்ஸ்களையும் முடித்தவன் தான்.

அவனது தகுதிக்கேற்ற வேலை இதுவரை கிடைக்கவில்லை. வேலை கிடைக்கவில்லை என்பதற்காக... அரசாங்கத்தையோ, வேலைவாய்ப்பு அலுவலகத்தையோ சாடிக் கொண்டு... சுய பச்சாதாபப்பட்டுக் கொண்டு ஊர் சுற்றித் திரியும் சராசரி இளைஞன் அல்ல தீபன்!

'படித்த இளைஞன்' என்று வெட்டி பந்தாவுடன்... பெற்றவர்களுக்கு பாரமாக தண்டச் சோறு சாப்பிடுபவர்களை அறவே வெறுப்பவன் தீபன்.

அப்பா கருணாகரன் ஒரு அரசாங்க அலுவலகத்தில் கிளார்க் உத்தியோகம் பார்க்கிறார். அம்மா கற்பகம் அக்கம் பக்கத்து வீடுகளில் இருப்பவர்களுக்கு... துணிகளைத் தைத்துக் கொடுத்து குடும்பச் செலவை ஓரளவு சரிக்கட்டினாள்.

தங்கை அஞ்சலி பி.எஸ்.சி படித்துவிட்டு... திருமணத்திற்காகக் காத்து நிற்கிறாள். சொந்த வீடு என்பதால் குடும்பச் சக்கரம் சுலபமாய் சுழல்கிறது.

வீட்டு மாடியில் சிறு குடிசையைப் போட்டு... அதில் காலை ஆறு மணியிலிருந்து எட்டு மணி வரை தீபன் ட்யூஷன் எடுத்தான்.

பத்தாம் வகுப்பு மற்றும் ப்ளஸ் ஒன், ப்ளஸ்டூ மாணவர்களுக்கு கணக்குப்

பாடத்தை போதித்தான். மாலையில்... ஐந்து மணியிலிருந்து ஏழு மணி வரையிலும் கிளாஸ் எடுத்தான்.

திறமையுடன் போதித்து மாணவர்களின் தரத்தை தீபன் உயர்த்தி விட்டதால்... தீபன் டியூஷன் சென்டருக்கு நல்ல மவுசு கூடி, முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் அவனிடம் சேர்ந்திருந்தனர்.

இரவு ஏழு மணியிலிருந்து ஒன்பது மணி வரை... அடுத்த ஷிப்ட் ட்யூஷன் எடுக்கும் அளவுக்கு புதிய மாணவர்கள் வந்து சேர்ந்த வண்ணம் இருந்தனர்.

வேலை கிடைக்கவில்லை என்ற கவலை அவனுக்கு ஒருநாளும் ஏற்பட்டதில்லை. பணத்தை சேமித்து வைத்து ஒரு ஷேர் ஆட்டோவை வாங்கினான். காலை ஒன்பது மணியிலிருந்து மாலை வரை ஆட்டோ ஓட்டி சம்பாதித்தான்.

கவிதை, இலக்கியம், கதை ஆகியவற்றை வாசிப்பதில் தீபனுக்கு விருப்பம் அதிகம். நல்ல புத்தகங்கள் கண்களில் பட்டால்... தயங்காமல் விலை கொடுத்து வாங்கி விடுவான். உழைத்த நேரம் போக... வாசிப்பதை சுவாசமாகவே கொண்டிருந்தான் தீபன்.

வீட்டுவாசலில் ஆட்டோ தடதடத்து வந்து நின்றது. ஆட்டோ வந்து நின்ற சப்தத்தைக் கேட்டதுமே... அம்மா கற்பகம் எட்டிப் பார்த்தாள். வாசலில் விட்டிருந்த புதிய காலணிகளைக் கண்டதும்.. புருவங்கள் முடிச்சுப் போட... ஆட்டோவிலிருந்து உதிர்ந்தான் தீபன்.

"தீபன்! தரகர் வந்திருக்காருப்பா... உங்கப்பாகூட இன்னமும் வீட்டுக்கு வரலை... என்ன பதில் சொல்லி அனுப்பறதுன்னு நான் தவிச்சுட்டிருந்தேன். நீயே வந்துட்டே"

உள்ளே நுழைந்து தரகருக்கு வணக்கம் தெரிவித்து விட்டு... ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

"எல்லாம் நல்ல செய்திதான் தம்பி! காஞ்சிபுரத்திலேர்ந்து போன வாரம் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்து உங்க தங்கச்சியை பொண்ணு பாத்துட்டு போனாங்களே? அவங்களுக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சாம்.

அவங்க பெரிசா எதுவும் எதிர்பார்க்கலை தம்பி. சொந்தமா வீடு


இருக்கு. நிலபுலம் இருக்கு... டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வச்சிருக்காங்க... நல்ல வருமானம்... அண்ணன் தம்பி ரெண்டே பேர் தான்... அக்கா, தங்கச்சி யாருமில்ல... பிக்கல் பிடுங்கல் கிடையாது. மூத்த மருமகளை உள்ளூரிலேயே பார்த்துட்டாங்க... மாப்பிள்ளைக்கு தங்கமான குணம். நல்ல வரன். விட்டிராதீங்க...

மூத்த மருமக இருபது பவுன் நகை சீர் செனத்தியோட வந்திருக்காளாம். பொண்ணு வீட்டுக்காரங்களா அவங்க திருப்திக்கு, வசதிக்கு ஏத்த மாதிரி போட்டு அனுப்பியிருக்காங்க... இவங்க ஏதும் கேட்டுக்கலையாம்.

இப்பவும் சரி... 'எதுவும் எதிர்பார்க்கலை... பொண்ணு வீட்டுக்காரங்களோட சக்திக்கு என்ன முடிஞ்சதோ... அதை அவங்க பொண்ணுக்கு செய்து போடட்டும். பொண்ணு எல்லோரையும் அனுசரிச்சு அன்பா, நடந்துக்கணும். அதைத்தான் நாங்க ரொம்ப எதிர்பார்க்கிறோம்'னு சொல்லி அனுப்பினாங்க..." வெற்றிலையை மென்றபடி பேசிமுடித்துவிட்டு ஏறிட்டார் தரகர்.

தரகர் விஷயத்தை விலாவாரியாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே... கருணாகரனும் வந்துவிட்டிருந்தார்.

அவரது முகம் சட்டென்று கூம்பிப் போனது.



**பீ**ஜிங் ஒலிம்பிக்கில் இசையோடு கூடிய ஜிம்னாஸ்டிக் போட்டியில் 'ஓம் சாந்தி ஓம்' படத்தில் இடம் பெற்ற 'தும் தானா...' பாடலின் இசையசை இசைத்து ஒரு குழு கலந்து கொண்டது. அவர்கள் ஆறாவது இடத்தையே பெற முடிந்தது என்றாலும், ஒலிம்பிக்கில் கலந்து கொண்டு பலரின் கவத்தை ஈர்த்ததையே மகிழ்வாக எண்ணுகிறார்களாம்.

- க.ரவீந்திரன்

"வீட்டில கலந்து பேசிட்டு... உங்களுக்கு எங்க முடிவை ஃபோன்ல தெரிவிக்கிறோம்" தயங்கியபடி அவர் கைகளைக் கூப்பியதும்... நாசூக்காக புரிந்து கொண்டு தரகர் எழுந்து கொண்டார்.

தீபன் சட்டென்று அம்மாவை ஏறிட்டான். அவளது முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் படிந்திருந்ததைக் கண்டதும்... தரகரை இடைமறித்தான்.

"எங்களுக்கு இந்த வரன் பிடிச்சிருக்கு. அஞ்சலிக்கு தங்கமான குணம். எல்லோரையும் அனுசரிச்சு நடப்பா... அஞ்சலிக்கு இருபது பவுன் போட்டு சீர் செனத்தியை எங்க சக்திக்கு தகுந்தாப்பல செய்து அனுப்பறோம்னு... நீங்க அவங்ககிட்ட சொல்லிடுங்க"

படக்கென்று தீபன் முடிவைத் தெரிவித்ததும்... கருணாகரனுக்கு பகீர் என்றிருந்தது.

"சரிப்பா... எதுக்கும் இரவு ஏழு மணிக்கு உங்களுக்கு ஃபோன் பண்றேன். நிதானமா கலந்து முடிவு எடுங்களேன்"

"ஏழு மணிக்கு நீங்க ஃபோன் பண்ணினாலும் இதே பதில் தான் கிடைக்கும்" தீபன் தீர்மானமாய் பேசியதைக் கேட்டு... திருப்தியுடன் விடைபெற்றார் தரகர்.

அவரது தலை மறைந்ததும்... கலவரம் படிந்த முகத்துடன் கருணாகரன் கேள்விக் கணையைத் தொடுத்தார்.

"தீபன்! என்னடா இது? அவசரக் குடுக்கையா முடிவைச் சொல்லி அனுப்பிட்டே? பவுன் விக்கிற விலையில... இருபது பவுன் போட முடியுமாடா?"

"அம்மாவோட நகைங்க பதினொரு பவுனுக்கு தேறும். குருவி சேர்க்கிற மாதிரி அம்மா கொஞ்சம் கொஞ்சமா அஞ்சு பவுன் வாங்கி வச்சிருக்காங்க. மீதி நாலு பவுன் தானே? என் செலவு போக... கடந்த நாலஞ்சு வருஷமா வர்ற வருமானத்தை சேர்த்து வச்சிருக்கேன். சமாளிச்சுடலாம் அப்பா!

அந்த வீட்டுல அஞ்சலிக்கு எந்தவிதமான கவுரவக் குறைச்சலும் வந்துடக்கூடாது. நல்ல வரன் வேறே? அதான்... சீர் செனத்தி, கல்யாணச் செலவுக்கு பணம் பத்தலைன்னா... வீட்டுப் பத்திரத்தை வச்சு லோன் வாங்கி சிறப்பா செய்துடலாம். நம்ம அஞ்சலி சந்தோஷமா இருக்கணும். அதான் முக்கியம்"

"தீபன்! இது... இது பூர்வீக வீடு... இதை..."

"புரியுது அப்பா. மீட்டுடலாம். எனக்கு நம்பிக்கை இருக்கு. பகவான் மேல பாரத்தைப் போட்டு, மளமளன்னு கல்யாண வேலைகளை கவனிப்போம். கடவுள் நம்மைக் கைவிடமாட்டாரு" அப்பாவுக்கு தைரியமூட்டினான் தீபன்.

"அ... அண்ணா! ஆட்டோவுல இந்தப் பெரிய பையை குனிஞ்சு எடுத்தப்போ... இந்த மஞ்சள் பை கிடைச்சது. ஸ்ட்ராங்கா முடிச்சு போட்டு வச்சிருக்கே? இதுல என்ன அண்ணா இருக்குது?" என்று கேட்ட அஞ்சலி யிடமிருந்து அந்த மஞ்சள் பையை வாங்கினான் தீபன்.

"இது நம்மோடது இல்ல அஞ்சலி" முடிச்சை நீக்கி பைக்குள் துழாவினான். நகைக் கடைகளில் வழங்கப்படும் பிளாஸ்டிக் டப்பாக்கள்...

இரு டப்பாக்களைத் திறந்து பார்த்த போது... வெல்வெட்டில் பொதிந்து கிடந்தன இரு கல் வளையல்களும், ஒரு நீண்ட மாங்காய் மாலையும், இரண்டு மோதிரங்களும்...

"ஐயோ! யாரோ நகையை விட்டுட்டு இறங்கிட்டாங்க போல... யாரா இருக்கும்? ஆங்... டி.நகர்லே சவாரியை இறக்கிட்டு நான் திரும்பினப் போ... வயதான கணவனும் மனைவியும் ஏகப்பட்ட லக்கேஜோட ஏறினாங்க... அனேகமா அவங்க தான் இதைத் தவற விட்டிருக்கணும். அவங்க வீடு... இங்க பஸ் ஸ்டாண்டுக்கு பின்னாடி தான்.

நகையைத் தொலைச்சுட்டு பதறிக்கிட்டிருப்பாங்க... கொடுத்துட்டு வந்துடறேன் அம்மா" ஓட்டமாக ஓடி ஆட்டோவைக் கிளப்பினான் தீபன்.

4

இனியாவுக்கு வேலையே ஓடவில்லை. மண்டையைப் பிளந்து பெரிய பாறாங்கல்லை வைத்து தைத்து விட்டாற் போல்... தலை கனத்து வலித்தது.

'சுந்தரா இப்படி? இது உண்மையா இருக்குமா?

அந்தப் பெண் ராதா இவ்வளவு துணிச்சலாக எனக்கு ஃபோன் செய்து பேசுகிறாளே? ஒரு பெண் எந்த விஷயத்திற்கு வேண்டுமானாலும் பொய் சொல்வாள். ஆனால் இந்த விஷயத்தில்... பொய் சொல்வாளா?

'நான் சுந்தரின் காதலி' என்று உறுதியாகக் கூறினாளே?

சுந்தர் நல்லவன் அல்ல... மலருக்கு மலர் தாவும் வண்டு என்று தெளிவாக சொல்லி விட்டாளே? சுந்தரைப் பற்றிய முழு விவரமும் அறிந்த பிறகு... அவனுக்கு கழுத்தை நீட்ட முடியுமா?

ஒரு பெண் பித்தனுக்கு மனைவியாகி அவனுடன் வாழ்க்கை நடத்த முடியுமா?

ஊகூம்! அதை நினைக்கும் போதே உடம்பும் மனசும் கூசிப் போய் விடுகின்றதே? இவனுக்குப் போய்... அப்பா என்னைப் பேசி முடிவெடுத்து நிச்சயமும் செய்து விட்டாரே?

அப்பா, இதுவரை எடுத்த முடிவுகள் தவறாக முடிந்ததே இல்லையே?

ஆனால் இந்த விஷயத்தில் அப்பா ஏமாந்துவிட்டார்.

உற்றார், உறவினர், நண்பர்கள் என்று ஊரையே அழைத்து விழாவை சிறப்பாக நடத்தினாரே? நிச்சயம் முடிந்து விட்டால்... பாதி கல்யாணம் முடிந்த மாதிரி என்பார்களே?

இந்த விஷயத்தை அப்பாவிடம் சொல்லி, திருமணத்தை நிறுத்தி விடலாமா?

அப்பாவுக்கு இதயம் பலவீனமாக இருக்கிறதே? அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு வந்துவிட்ட தருணத்தில்... திருமணத்தை திடீரென்று நிறுத்தினால் ஊரார் ஏளனம் செய்யமாட்டார்களா? அதை நினைத்து அப்பாவுக்கு ஏதாவது ஆகி விட்டால் என்ன செய்வது?

ஏற்கெனவே அப்பா ஏதோ ஒரு குழப்பத்திலிருக்கிறார். இதைச் சொன்னால் அவர் அதிர்ச்சி அடைந்து விடுவாரே?'

மனதிற்குள் ஓராயிரம் கேள்விகள் படையெடுத்த வண்ணம் இருந்தன.

தலைவலி விண்விண் என்று தெறித்தது. ஆபீஸ் முடிந்ததும்... நேராக வீட்டிற்கு தான் செல்வாள் இனியா. அன்று ஏனோ வீட்டிற்குச் செல்லவே பிடிக்கவில்லை.

கண்ணீர் பொங்கிப் பொங்கி ஊற்றெடுத்தது. மனம் அலைபாய்ந்தது.

திடீரென்று தோழி வசுந்தராவின் ஞாபகம் வந்தது.

'அவளுக்கு இன்னமும் பத்தே நாட்களில் திருமணம்!

திருமணம் முடிந்த கையோடு கணவனுடன் விஜயவாடாவுக்கு சென்று விடுவாளே? பின்பு அவளை அடிக்கடி பார்க்க முடியாதே?

அவளது வீட்டிற்குச் சென்று... அவளுடன் அரைமணி நேரமாவது மனம் விட்டுப் பேசினால்தான்... தெளிவு பிறக்கும் என்று தோன்றியது.

வசுந்தராவின் பெற்றோர்களும் இனியாவுடன் வாஞ்சையாக அளவளாவுவது வழக்கம்!

இவளது மனக் கவலைக்கு மருந்து தேடி, வசுந்தராவின் வீட்டிற்குச் சென்றால்... அந்த வீடே கவலையில் மூழ்கிக் கிடந்தது.

வசுந்தராவின் அப்பா இடிந்து போய் அமர்ந்திருந்தார்.

அவளது அம்மா சுவரோரமாக சாய்ந்து அமர்ந்திருந்தாள். அவளது விழிகளிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது.

வசுந்தராவோ முழங்காலைக் கட்டிக் கொண்டு... அதில் முகம் புதைத்து விசும்பிக் கொண்டிருந்தாள்.


"வசு! கல்யாணம் நின்னுடுமா?

## எங்கே சுதந்திரம்...?

பேராசைத் தோட்டத்தில்
சுயநலமே மலர்கள்...
– எங்கே சுதந்திரம்?

அகிம்சை எனும் வானத்தில்
தீவிரவாதமே புறாக்கள்...
– எங்கே சுதந்திரம்?

'தியாகம்' எனும் சமுத்திரத்தில்
கோடிகளே திமிங்கிலங்கள்...
– எங்கே சுதந்திரம்?



பிரிவினை வயலில்
வன்முறையே வரப்புகள்...
– எங்கே சுதந்திரம்?

முகங்களின் தேசத்தில்
முகமூடிகளே அரசாட்சி...
– எங்கே சுதந்திரம்?

புத்தன் பிறந்த நாட்டில்
துப்பாக்கி ஒலியே சத்தம்...
– எங்கே சுதந்திரம்?

இருளின் ஆட்சியில்
ஒலியக் கண்காட்சி...
– எங்கே சுதந்திரம்?

- குடந்தை பாலு

என்னத்துக்கு? என்ன விஷயம் சொல்லேன் வசு" தோழியின் மோவாயைத் தொட்டு நிமிர்த்தினாள் இனியா.

"இ... இன்னைக்கு புதுப்புடவைங்க, பாத்திர பண்டங்கள், நகைங்க எல்லாம் வாங்கிட்டு வந்தாங்க... நகை வச்சிருந்த பையை மட்டும் எப்படியோ தொலைச்சுட்டாங்க... அம்மாவும் அப்பாவும் வீட்டுக்கு வந்தப்புறம் தான் இது தெரிஞ்சது.

ஆட்டோவில ஏறும்போது பத்திரமா இருந்ததாம். எல்லாம் நேரம் இனியா! இந்தக் காலத்துல நகை விக்கிற விலைக்கு.. இனி வாங்க முடியுமா?

நகை தொலைந்து போச்சுன்னு சொன்னா... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நம்புவாங்களா? எங்க அண்ணனுங்க ரெண்டு பேரும் அவங்கவங்க குடும்பத்தைப் பார்த்துக்கிட்டு தனியா கழண்டுகிட்டாங்க... கழுத்துல மஞ்சள் கயிறை மாட்டிக்கிட்டு தன்னோட தாலிச் செயினை... எங்கம்மா வித்து தான் எனக்கு நகை வாங்கினாங்க... அதுவும் பறிபோயிடுச்சே இனியா!"

"நகை காணாம போச்சுன்னு போலீஸ் ஸ்டேஷன்லே ஒரு புகார் ஏதாச்சும்..." இனியா பேசி முடிக்கும் முன் அந்த அம்மாள் குறுக்கிட்டாள்.

"இந்தக் கல்யாணம் நின்னு போகக்கூடிய சூழ்நிலை வரணும்கிறது விதி! போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயி புகார் கொடுத்து என்ன ஆகப் போகுது? நகையோட விலை ராக்கெட் மாதிரி கிர்ருனு ஏறிப்போச்சே? திரும்பவா அது கிடைக்கப் போகுது? எல்லாம் எங்க தலை விதி"

"கவலைப்படாதீங்கம்மா. கடவுள் நம்மைக் கைவிட மாட்டாரு. நம்பிக்கையோட இருங்க. வசுவோட கல்யாணம் தடங்கல் இல்லாம... நல்லபடியா நடக்கும்னு நம்புங்க" அந்த அம்மாவின் கண்ணீரைத் துடைத்து... இனியா ஆறுதல் கூறிய நேரத்தில்... வீட்டு வாசலில் அந்த ஆட்டோ தடதடத்து வந்து நின்றது.

சிறு மஞ்சள் பையை ஏந்தியபடி டிரைவர் உடையில் உள்ளே வீட்டுக்குள்ளே நுழைந்த அந்த வாலிபனைக் கண்டதும்... இனியா அவளையும் அறியாமல் சட்டென்று எழுந்து நின்றாள்.

"ஐயா வணக்கம்! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் இந்த மஞ்சப் பையைப் பார்க்க நேரிட்டது. உள்ளே நகைங்க இருந்ததைப் பார்த்ததும்... நீங்க தான் இதைத் தவற விட்டுட்டீங்கன்னு நான் புரிஞ்சுகிட்டேன். கல்யாணத்துக்கு வேண்டிய பாத்திர பண்டம், ஜவுளிங்கன்னு ஏகப்பட்ட

பார்சல்லை எடுத்துட்டு வந்தீங்களே?

விலையுயர்ந்த நகையை இவ்ளோ அஜாக்கிரதையா மிஸ் பண்ணியிருக்கீங்களே? இந்தாங்க... உள்ளே எல்லா நகைங்களும் சரியா இருக்கான்னு பார்த்துட்டு சொல்லுங்க" புன்னகைத்தபடி அந்தப் பையை பெரியவரிடம் நீட்டினான் தீபன்.

"தம்பி! ஆபத்பாந்தவனா அனாத ரட்சகனா நீங்க என் கண்ணுக்கு தெரியறீங்க தம்பி! எங்க பொண்ணோட கல்யாணமே நின்னு போயிடுமேன்னு இடிஞ்சு போயிட்டோம். எங்க வயித்துல பாலை வார்த்தீங்க. இன்னிக்கு இருக்கிற விலைவாசியில இந்தப் பை... வேற யார் கண்ணில் பட்டிருந்தாலும் அது எங்களுக்கு திரும்பக் கிடைச்சிருக்காது. இப்பேர்ப்பட்ட நேர்மையான பிள்ளையைப் பெத்தெடுக்க... உங்க அப்பா அம்மா நிறைய புண்ணியம் பண்ணியிருக்கணும். உ... உட்காருங்க தம்பி" கண்ணில் கசிந்த கண்ணீரைத் துடைத்தபடியே சிலாகித்துப் பேசினார் பெரியவர்.

"ஐயா! நான் செய்தது ரொம்ப சாதாரண விஷயம் தான். என் ஆட்டோவில நீங்க தவற விட்டிருக்கீங்க. கஸ்டமர் தவற விட்ட பொருளைக் கொண்டு வந்து பத்திரமா கொடுக்க வேண்டியது... என்னோட கடமை தானே? அது தவிர நானும் நடுத்தர வர்க்கத்து கஷ்ட நஷ்டங்களை நன்கு உணர்ந்த இளைஞன். கல்யாண வயசுல எனக்கும் ஒரு தங்கை இருக்கிறாள்.

அவளுக்கு நகை சீர் செனத்தி செஞ்சு சிறப்பா கட்டிக் கொடுக்கணும். நாலஞ்சு பவுனுக்கு பட்ஜெட்டுல துண்டு விழுந்திருக்கு. அதுக்கு... வீட்டை அடமானம் வச்சுடலாம்?... கடன் வாங்கிடலாமா?ன்னு தவிச்சு தத்தளிக்கிறாமே?

இதே மாதிரி கஷ்டப்பட்டுதானே நீங்களும் நகை சீர்னு வாங்கியிருப்பீங்க? அசம்பாவிதமா நகை காணாம போயிட்டா... ஒரு பொண்ணோட எதிர்காலமே பாதிச்சுடும்னு எனக்கு நல்லாவே தெரியும்.

ஒரு சாதாரண இளைஞனா என்னோட கடமையை நான் செய்திருக்கேன். இதுக்குப் போயி இவ்ளோ பாராட்டறீங்களே?" என்றான் தீபன்.

"அ... அப்படி சொல்லாதீங்க தம்பி! நாங்க கும்பிடற கடவுள் தான் உங்க ரூபத்துல வந்திருக்கிறதா எங்க மனசுக்குப்படுது. உங்களுக்கு வேணும்னா இது சாதாரண விஷயமா இருக்கலாம். இந்த நகை திரும்பவே கிடைக்காம இருந்திருந்தா... மகள் கல்யாணம் நின்னு போயிடும்கிற பயத்துல நாங்க தற்கொலை கூட செய்திருப்போம். அந்த அளவுக்கு மனசுடைஞ்சு போச்சு.

உங்களுக்கு ஆயிரம் நன்றி தம்பி! உங்க பேர் என்ன தம்பி?"

"என் பேர் தீபன். நகைங்க கரெக்டா இருக்கான்னு பார்த்து சொல்லிடுங்கம்மா. நான் கிளம்பறேன்"

"சும்மா இருங்க தம்பி. எங்க பொண்ணு வாழ்க்கையே இருண்டு போச்சேன்னு துடிச்சுப் போயிட்டோம். தீபமேத்தி வச்சுட்டீங்க. ஒரு வாய் மோராவது நீங்க குடிச்சுட்டுத் தான் போகணும். உங்க முகவரியும் குடுங்க தம்பி! நேர்லே வந்து அம்மா அப்பாவைப் பார்த்துட்டு அழைப்பிதழ் வைக்கிறோம். குடும்பத்தோட வந்து எங்க பொண்ணை வாழ்த்தணும்" அந்த அம்மாள் பேசியபடியே அடுக்களைக்குள் புகுந்தாள்.

இனியா ஸ்தம்பித்து சிலை போல் நின்று விட்டாள்.

தீபன் பேசியதைக் கேட்டதும்... அவளது முகத்தில் விளக்குபோட்டாற் போல் வெளிச்சம் பரவியது.

முகத்தில் மட்டுமா வெளிச்சம் வந்தது?

அவளது மனமாகிய குகைக்குள் திடீரென்று வெளிச்சம் வந்தது. தீபமேற்றியவன் தீபன்!

---



**தெ**ன் கொரியாவில் டேகு நகரில் நடந்த உடலில் வண்ணம் தீட்டும் உலகளாவிய விழாவில் தங்கள் நிர்வாண உடல்களில் வண்ண ஓவியங்களைத் தீட்டிக் கொண்டு மாடல்கள் சிலர் இப்படி வலம் வந்தனர்.

- க.ரவீந்திரன்



5

அந்த இனிய அதிர்ச்சியில் இனியா ஆடிப் போய்விட்டாள். பெரியவரும் அந்த அம்மாளும் ஆனந்தத்தில் மிதந்து கொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்திற்கு முன்பு... மகளின் திருமணம் நின்றுவிடும் என்ற பயத்தில், துயரக் கடலில் மூழ்கியவர்கள் தான்!

தொலைந்து போன பையை... கையோடு கொண்டு வந்து கொடுத்து அவர்களது கண்ணீரைத் துடைத்து விட்டான் தீபன்.

'தீபன்... தீபன்'

எவ்வளவு அழகான பெயர்!

பெயருக்கேற்றாற் போல் அவனும் வசீகரமான வாலிபன் தான். தோற்றத்தில் மட்டும் அழகு இருந்து விட்டால் போதாது. உள்ளிருக்கும் மனமும் குணமும் நன்றாக இருக்க வேண்டும்.

இவனுக்கு எல்லாமும் அமைந்திருக்கிறதே!

நேர்மையின் மொத்த உருவமாக இருக்கிறானே? ஆச்சரியத்தில் இனியாவின் இமைகள் இமைக்க மறந்தன.

இந்தக் காலத்தில் இப்படியொரு இளைஞனா?

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவனாக இருந்த போதிலும்... அதிலும் தங்கையைக் கரையேற்ற விழி பிதுங்கிக் கொண்டிருக்கும் தருணத்திலும்... மனம் தடம் புரளாமல் மனிதாபிமானத்தோடு நகையை வீடு தேடி வந்து கொடுத்து விட்டானே?

அவனது பணிவான பேச்சும், அந்த சிரித்த முகமும் பசை போட்டு ஒட்டிவிட்ட தினுசில் 'பச்சக்' என்று அவளது மனதில் பதிந்து விட்டான்.

சுந்தர், அவளது அத்தான் தான்!

'அத்தான்' என்ற உரிமையைக் கையிலெடுத்துக் கொண்டு... சுந்தர் அவளிடம் நெருங்கிப் பழக முயன்றிருக்கிறான்.

ஆனால் இனியாவோ நறுக்குத் தெறித்தாற் போல் நான்கு வார்த்தைகள்

மட்டுமே எண்ணிப் பேசிவிட்டு அவனை எட்டவே நிறுத்தி விடுவாள்.

சிவராமன் சுந்தரையே மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்த பிறகும் சரி... வருங்காலக் கணவன் என்ற ரீதியில்... ஃபோனிலோ, நேரிலோ சுந்தர் குழைந்து பேசுவதை இனியா அனுமதித்ததில்லை.

இவளது குணமறிந்து அவனும் வாலைச் சுருட்டிக் கொண்டான் என்று தான் சொல்ல வேண்டும்.

இதுவரை அவளது மனம் எதுவும் எழுதப்படாத வெள்ளைக் காகிதமாய் தான் இருந்திருக்கிறது. ஆனால் தீபனை சந்தித்த பிறகு... பளிங்கு போன்று தெளிந்திருந்த மனமாகிய குளத்தில் கல்லெறிந்தாற் போலாகி விட்டது.

தீபன் கைகளைக் கூப்பி வணங்கி விடைபெற்றுச் சென்றதும்... தோழி வசுந்தரா இனியாவின் தோளைத் தொட்டாள்.

"இனியா! இப்பத்தான் உசுரே திரும்ப வந்த மாதிரி இருக்கு. நீ வந்த நேரம் எங்க கவலை பறந்து போயிடுச்சு. நீ இருந்து டிபன் சாப்பிட்டுட்டுத் தான் போகணும்."

"இல்ல வசு! ஆபீசிலேர்ந்து நேரா இங்க வந்துட்டேன். டாக்டர் வேற இன்னிக்கு அப்பாவை 'செக்கப்' பண்ண வர்றேன்னு சொல்லியிருந்தாரு. அவர் வர்றப்போ நான் வீட்டுலே இருந்தாகணும்.

இன்னொரு நாளைக்கு சாவகாசமா நான் வர்றேன். உன் முகத்துல சந்தோஷத்தைப் பார்த்ததிலேயே எனக்கு மனசும் வயிறும் நிறைஞ்சிடுச்சு. வரட்டுமா?" தோழியின் கரத்தை அன்புடன் அழுத்திவிட்டு விடைபெற்றாள் இனியா.

வீட்டை நோக்கி காரை செலுத்தியவளின் மனக் கண்முன் தீபன் வந்து வந்து போனான்.

'என்னது இது? எனக்குள் ஏனிந்த மாற்றம்?

தீபனைச் சந்தித்து முழுதாக ஒருநாள் கூட ஆகவில்லை.

அவன் நேர்மையானவன் தான். நல்லவன் தான். அதனால் மனம் கட்டுக்குள் அடங்காமல் சண்டிக் குதிரையாய் தாவி அவனை நோக்கி ஓடுகின்றதே? இது நல்ல பெண்ணிற்கு அழகல்லவே?

சுந்தருக்கும் எனக்கும் நிச்சயதார்த்தம் நடந்து முடிந்து விட்டது.

சுந்தர் ஒரு அயோக்கியன். கடைந்தெடுத்த பொறுக்கி என்று இன்று தானே அறிந்த கொள்ள முடிந்தது? திருமணத்தை எப்படி நிறுத்துவது?

அப்பாவின் உடல்நிலை இந்த அதிர்ச்சியைத் தாங்குமா? நிச்சயம் அவர் தாங்கமாட்டார்.

சுந்தரைப் பற்றிய விவரம் தெரிந்தால்... அப்பா திருமணத்தை நிறுத்தி விடுவார் என்று எப்படி எதிர்பார்க்கலாம்? கூடப்பிறந்த தங்கையின் மகன் சுந்தர் என்பதால்... விஷயம் தெரிந்தாலும் கண்டும் காணாமல் அப்பா இருந்து விட்டால்...?

ஊரார் தூற்றுவார்கள் என்று பயந்து திருமணத்தை நிறுத்தாமல்... நடத்தி விட்டால் என்ன செய்வது?

விஷயத்தை சொல்லவும் முடியாமல் மறைக்கவும் முடியாமல் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவிக்கிறேனே?

இதற்கு தீர்வு தான் என்ன?'

விழிகளில் நீர்த் திரையிட்டு அவளது பார்வை மங்கியது. கண்ணீரை அழுந்தத் துடைத்துக் கொண்டு காரை வீட்டை நோக்கிச் செலுத்தினாள்.

அவள் வீட்டை அடைந்தபோது... அவளுக்காக இன்னொரு அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

போர்டிகோவில் நிறுத்தப்பட்டிருந்த காரைப் பார்த்ததுமே... இனியாவின் விழிகள் ஆச்சரியத்தில் மேலேறின.

'அட! டாக்டர் தேவசகாயம் அங்கிள், வழக்கத்திற்கு மாறாக முன்னதாகவே வந்து விட்டாரே?'

அப்பாவின் அறையை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

"வாம்மா இனியா! என்ன ஆபீசிலே ரொம்ப வேலையா? ரொம்ப களைச்சுப் போய் தெரியறே?" கரிசனத்துடன் சிரித்தபடி கேட்டார் தேவ சகாயம்.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல அங்கிள். நீங்க வர்றதுக்கு முன்னாடி நான் வீட்டுல இருக்கணும்னு தான்... ஃபிரண்டை பார்த்துட்டு சீக்கிரமா

சரியாப்படலை.

அடுத்த மாசம் கல்யாணத்தை வச்சுக்கிட்டு இந்தப் பயல் இப்படி கூத்தடிக்கிறானே?ன்னு 'ஷாக்' ஆயிட்டேன்.

சிவராமன் அவசரப்பட்டு முடிவெடுத்துட்டான்னு எனக்கு தோணுது. இதை அவன் கிட்ட சொல்லிடணும்னு தான் கிளம்பினேன். அந்த கண்றாவியை நேர்ல பார்த்துட்டு என்னாலயே தாங்கிக்க முடியலையே? சிவராமன் எப்படி தாங்கிப்பான்? அவனுக்கு ஏதாச்சும் ஏடாகூடமா ஆயிட்டா? அந்த பயம் தான் என்னைப் பேச விடாம தடுத்துடுச்சு. அதுக்காக இந்த விஷயத்தை மெத்தனமா விடவும் முடியாது. என் ஃபிரண்டோட மகளா இருந்தாலும்... நீயும் எனக்கு ஒரு மக மாதிரி தானே? மனசு கேட்கலைம்மா... இது உன்னோட வாழ்க்கைப் பிரச்சினையாச்சே?

இப்படிப்பட்ட லோஃபருக்கு வாழ்க்கைப் பட்டா... உன் கதி என்னாகும்? அதான் என் மனசுல இருக்கிறதை அப்படியே உன் கிட்ட கொட்டிட்டேன். என்னம்மா பண்ணலாம்?"

இனியாவின் கண்கள் உடைப்பெடுத்துக் கொண்டன. ஏற்கனேவே தெரிந்த விஷயம் தான். தந்தையின் நெருங்கிய நண்பர் தேவசகாயம் ஆற்றாமை தாளாமல் விசனப்பட்டதும்.... எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாய் வளர்ந்து விசுவரூபம் எடுத்து அவளை மிரட்டியதும்... இனியா தூள் தூளாய் நொறுங்கித் தான் போனாள்.

## விவேகத் தூக்கம்

**வே**றேதோ காகிதங்களின்
கடைசிவரியில் முடிகிறது
என் கவிதை!

வேறுபாடுகளின்
ஒற்றுமையிலேயே
விவேகத் தூக்கம்!

வேறிடமிருந்து வரும்
எண்ணங்களின் சொந்தம்
விலகியனவாகவே
பொருள்!

வெவ்வெறு சிந்தனையின்
வடிவங்களாக
வருகிறது வார்த்தை!

வென்றுவிடும்
கவிதையாக
முற்றுப் பெறவே தருணம்
வருமோ!?

- தமிழ்நாயகி,
சேலம்

# 6

"இனியா! அம்மாடி! கண்ட்ரோல் யுவர் செல்ஃப்! கண்ணைத் தொடைச்சுக்கோ... நீ படிச்சவ, புத்திசாலி பொண்ணு... அடுத்து என்ன பண்ணலாம்னு யோசிக்கிறதை விட்டுட்டு அழுறியேம்மா...

இந்தத் தகவல் உனக்கு ரொம்ப அதிர்ச்சியைக் கொடுக்கும்னு எனக்கு தெரியும். நல்ல வேளையா கல்யாணம் முடியறதுக்கு முன்பே விஷயம் வெட்ட வெளிச்சத்துக்கு வந்ததேன்னு... நாம்ப சந்தோஷப் பட்டுக்க வேண்டியது தான். அந்த சுந்தர் பயல் பார்க்கப் பதவிசா, பணிவா பூனை மாதிரி நடிச்சு நம்மளைக் கவுத்துட்டான். இல்லையா?"

சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்தவள் மெல்ல நிமிர்ந்தாள்.

"இந்த விஷயம் எனக்கு இன்னிக்கு காலையிலேயே தெரியும் அங்கிள்! சுந்தராலே பாதிக்கப்பட்ட பொண்ணு ஒருத்தி... எனக்கு ஃபோன்லே 'இதை' தெரிவிச்சா... அப்பா கிட்டே சொல்லி கல்யாணத்தை நிறுத்தச் சொல்லுன்னு எச்சரிக்கை பண்ணினா...

அப்பா முன்ன மாதிரி இருந்திருந்தா... உடனடியா அவருக்கு இந்த விஷயத்தைச் சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

இப்போ அவரோட 'ஹெல்த் கண்டிஷன்' தான் என் வாயைக் கட்டிப் போட்டிருக்கு. அங்கிள்! நீங்க எங்க ஃபேமிலி டாக்டர் மட்டுமில்ல... அப்பாவோட க்ளோஸ் ஃப்ரெண்ட்! நீங்களே இந்த விஷயத்தை உடைச்சுப் பேசத் தயங்கறப்போ... நான் என்ன செய்ய முடியும்? அப்பாவை விட்டா எனக்குன்னு யாரு இருக்காங்க? அண்ணா ரகு கடற்கரை மணலை உதறிட்டுப் போறாப்பல... தனியா போயிட்டான். இன்னும் சில நாட்கள்லே அப்பா இன்விடேஷனை வினியோகம் பண்ண ஆரம்பிச்சிடுவாரே?" தழுதழுத்தாள் இனியா.

"ஏதாவது காரணத்தைச் சொல்லி இன்விடேஷன் வினியோகம் பண்ற வேலையை... ரெண்டு வாரத்துக்கு தள்ளிப் போடச் சொல்றேன். அதுக்குள்ளே நமக்கு எந்த வழியாவது புலப்படாமலா போகும்?"

"தேங்க் யூ அங்கிள்! அந்த மாங்காட்டு காமாட்சி அம்மனும் தெய்வமாயிட்ட எங்கம்மாவும் என்னைக் கைவிட மாட்டாங்கன்னு நான் நம்பறேன். இந்த



இக்கட்டுல இருந்து என்னை எப்படியாவது மீட்டுடுவாங்கன்னு நான் பூரணமா நம்பறேன் அங்கிள்"

"உம்! வெரி குட் இனியா! இதே மாதிரி நம்பிக்கையோட இரு. நமக்கு நல்ல வழி பிறக்கும்... சரியாடா?" விடைபெற்றுச் சென்றதும்... சில நிமிடங்கள் யோசனையுடன் அமர்ந்திருந்தாள்.

விதவிதமான வண்ணங்களில் ரோஜாக்கள் மலர்ந்து காற்றுக்கு தலையசைத்துக் கொண்டிருந்தன. பூக்களைப் பறிக்காமல் செடியிலேயே வைத்து அழகு பார்க்கும் ரசனை உடையவள் இனியா.

இன்று ரசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. மனம் இரும்பு குண்டாக கனத்துத் தொலைத்தது.

ஒவ்வொரு ரோஜாக்களிலும் தீபனின் மலர்ந்த முகம்... தோன்றித் தோன்றி மறைந்தது.

'சே! இதென்ன பைத்தியக்காரத்தனம்? தீபன் நல்லவன் என்ற ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு... என் மனம் சதா அவனை நினைத்துப் பார்ப்பது முறையில்லையே?

அப்படியே நான் அவனை நேசித்தாலும்... இந்தக் காதல் கை கூடுமா?

சுந்தர் நல்லவனில்லை என்பதையே அப்பாவிடம் இன்னமும் தெரிவிக்க இயலாத சூழ்நிலை!

தங்கை மகனை உதறி விட்டு... அப்பா யாரோ ஒரு ஆட்டோ டிரைவருக்கு தமது செல்ல மகளைத் தாரை வார்த்துக் கொடுப்பாரா?

தீபனைப் பற்றிய பேச்செடுக்கவே முடியாதே?'

மனசாட்சி மணலாய் உறுத்தியது.

சட்டென்று உள்ளே சென்று முகத்தை அலம்பி வேறு உடைக்கு மாறினாள்.

பூஜையறையில் விளக்கேற்றி பத்து நிமிடங்கள் தியானித்து விட்டு... அப்பாவின் அறைக்குள் புகுந்தாள்.

படுக்கையில் சாய்ந்து அமர்ந்து ஏதோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த சிவராமன்... புத்தகத்தைக் கவிழ்த்துக் விட்டு மெல்ல நிமிர்ந்தார்.

“என்ன இனியா? தேவசகாயம் கேட்டமாதிரி ஆபீஸ்லே ரொம்ப வேலையா? முகம் ரொம்ப வாட்டமா இருக்கே? எதையோ பறிகொடுத்தாப்பல இருக்கியே?”

என்ன தான் இயல்பாக இருப்பதைப் போல் காட்டிக் கொண்டாலும்... உள்ளுக்குள் இருந்த கவலையும் பயமும் அவளைக் காட்டிக் கொடுக்கத் தான் செய்தன.

“அது வந்து... புரொடக்ஷன் மேனேஜர் ஊழல் பண்ணினார்னு வேலை நீக்கம் செய்தோமே? அந்த போஸ்ட்டுக்கு தகுதியான நபர் கிடைக்கவே இல்லைப்பா... வந்த அப்ளிகேஷன்ஸ் எல்லாமே எனக்கு திருப்திகரமா இல்லைப்பா... அ... அதைப் பத்தி தான் ஒரே யோசனையா இருக்கு”

சமயோசிதமாக சட்டென்று பொய்மூட்டையை அவிழ்த்து விட்டாள் இனியா.

“இதுக்குப் போயா கவலைப்பட்டுக்கிட்டிருக்கே? நாளைக்கே பேப்பர்லே ஒரு விளம்பரம் கொடுத்துட்டோம்னா... ஆபீஸ் வாசல்லே ஆயிரம் பேர் வந்து க்யூவில நிக்கப் போறாங்க...” மெல்ல நகைத்தார் சிவராமன்.

“என்ன இருந்தாலும் உங்க அனுபவமும், சாமர்த்தியமும் எனக்கு வருமா அப்பா? நான் கேட்கிறேனேன்னு தப்பா நினைக்காதீங்கப்பா...

சமீப காலமா உங்க முகத்துல கவலையும் குழப்பமும் தெரியுதே? அதுக்கு என்னப்பா காரணம்? என் கிட்டே மனசு விட்டுப் பேசக்கூடாதாப்பா?”

குரலில் கரிசனமும் பாசமும் கசிந்தோட கலங்கிய விழிகளுடனும் சிவராமனை ஊன்றிப் பார்த்தாள் இனியா.

“அ... அப்படி எதுவும் இல்லைம்மா.. கூடிய சீக்கிரம் கல்யாணமாகி... புகுந்த வீட்டுக்குப் போயிடுவே இல்லியா? அதான்... கவலையா இருக்கு. என் கண்மணி இனியா சந்தோஷமா இருக்கணும். அவ கண்ணுல கண்ணீரை நான் பார்க்கவே கூடாது. அதான் என் பிரார்த்தனை” பரிவுடன் பேசியவரின் குரல் கரகரத்தது.

‘இதுவா காரணம்? ஊகூம்... அப்பா சாமர்த்தியமாக சப்பைக் கட்டு கட்டுகிறார்.’

“இனியா! நாளைக்கு உனக்கு பிறந்தநாள். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் நகைக்கடைக்கு ஃபோன் பண்ணினேன்.

தொடர்ச்சி 34-ம் பக்கம்

அபிராமி மெகா மால் திரையரங்க உரிமையாளர் அபிராமி ராமநாதன்– திருமதி நல்லம்மை நாதன் சஷ்டியப்த பூர்த்தி மணிவிழா 9.9.2008– ஆம் தேதி, ராணி மெய்யம்மை ஹாலில் நிகழ்ந்தது. விழாவின் சிறப்பம்சமாக தேவருலகையே பூமிக்குக் கொண்டு வந்ததுபோல் அரங்க நிர்மாணம் செய்திருந்தார்கள். பனிபடர்ந்த இமயமலையில் சிவபெருமான் பார்வதி தேவி வீற்றிருக்க, பாற்கடலில் இருந்து அம்ருதகலசத்துடன் திருமால் தன்வந்திரி பகவானாக எழுந்தருளுகிறார். விநாயகர், முருகன், நாரதர் எல்லாரும் ஆங்காங்கே காட்சி தர, மேடையில் பிரம்மாண்டமான வலம்புரிச் சங்கு இருப்பதுபோல் செட் அமைந்திருந்தனர். விழாவுக்கு வந்திருந்த அனைவருமே இக்காட்சி கண்டு மெய்சிலிர்க்க ரசித்தனர். வாழ்த்துக்கள் ராமநாதன்.

சினிமா சினிமா



வைத்தளித்தனர். அதில் பாரதிராஜாவின் கலை உலகப் பயண அனுபவங்களும், அமெரிக்கப் பயண அனுபவங்களும் அழகாகப்பதிவுசெய்யப் பட்டிருக்கிறது.

சத்யராஜின் புதல்வர் சிபிராஜ்– வி. ரேவதி தம்பதியரின் திருமண வரவேற்பு நிகழ்வும் செப்டம்பர் 15 ஆம் தேதி இதே மேயர் இராமநாதன் செட்டியார் மண்டபத்தில் நிகழ்ந்தது. கொங்குச் சீமையிலிருந்தே சமையல் கலைஞர்களை வரவழைத்து, வித்தியாசமான ஏகப்பட்ட உணவு அயிட்டங்களை இலையில் பரிமாறி அசத்திவிட்டனர். பாயசத்துக்கு பதில் பனங்கற்கண்டுப் பால், கம்பு தயிர் சாதம், பேரீச்சம்பழ சட்னி, பட்டர் பீன்ஸ் புலாவ், மா. இஞ்சி தொக்கு, மேத்தி சப்பாத்தி, தாவா சப்ஜி என ஒவ்வொன்றும் புதுமைதான். வெஜ்–ஆம்லெட், சைவ மீன் குழம்பு என்று கூட

கதாநாயகியாக ரிதிமா நடிக்கிறார். முழு நீளக் காமெடி படமான இதில், 'சுந்தரா டிராவல்ஸ்' படத்திற்குப் பிறகு முரளி நகைச்சுவைப் பாத்திரமேற்றுக் கலக்கியிருக்கிறாராம். 'காசு இருக்கணும்' படத்தில் ஹீரோவாக அறிமுகமான விஷ்வா, நடிப்பிலும் நடனம், சண்டைக் காட்சிகளிலும் இப்படத்தில் நல்ல பயிற்சி பெற்று, முழுத் திறமையும் வெளிக்காட்டி நடித்திருப்பதால், இப்பட வெற்றிக்குப் பின் முன்னணி நாயகர்கள் வரிசையில் இடம்பிடித்து

**அ**ண்மையில் பாரதிராஜாவின் புதல்வி ஜனனி ஐஸ்வர்யா – ராஜகுமார் திருமண வரவேற்பு நிகழ்வு, மேயர் இராமநாதன் செட்டியார் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. வந்திருந்த அனைவருக்கும் தாம்பூலப் பை தரும்போது, அதனுள் 'ஞாபக நதிக் கரையில்' என்னும் அருமையான நூல் ஒன்றையும் சில அபிட்டங்களின் பெயர்கள் இருந்தன.

**ச**ஞ்சய்ராம் கதை, வசனம் எழுதி, லிங்கம் தியேட்டர்ஸ் சார்பில் தயாரித்து இயக்கும் படம் 'பூவா தலையா'. கிருஷ்ணகுமார்– உதயா இருவரும் இதில் கதாநாயகர்கள். ஷெரீன், மேகாநாயர் இருவரும் நாயகிகள். ஸ்வேதா, காதல் தண்டபாணி, சாப்ளின் பாலு ஆகியோருடன் 'வாலி' என்னும் புதுமுக வில்லனும் நடிக்கிறார்கள். சஞ்சய்ராமும் முக்கியமான பாத்திரம் ஒன்றில் நடிக்கிறார்.

'**எ**ங்கராசி நல்ல ராசி' என்னும் படத்தை ஜி.ஆர்.கோல்டு பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. ரவி–ராஜா என்கிற இரட்டையர் இயக்கும் படம் இது. முரளி, விஷ்வா இருவரும் இணைந்து நடிக்கிறார்கள்.



விடுவாராம். வாழ்த்துகிறோம் விஷ்வா.

'**பூ**' திரைப்படத்தின் கதை, எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் எழுதிய 'வெயிலோடு போய்' சிறுகதையை அடிப்படையாகக் கொண்டதாம். இப்படத்தின் இசை வெளியீட்டு விழா, செப்டம்பர் 12 ஆம் தேதி சாந்தம் திரையரங்கில் நடைபெற்றபோது, மேடை முழுக்க வண்ணதாசன், திலகவதி, எஸ்.ராமகிருஷ்ணன், பவா. செல்லத்துரை என எழுத்துலக நட்சத்திரங்களே அதிகம் இடம்பெற்றிருந்தனர். இயக்குநர் பாலுமகேந்திரா, வஸந்த், மிஷ்கின், கலைப்புலி எஸ்.தாணு, நடிகர் ஜெயம் ரவி, இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி, இராம. நாராயணன் என்று திரையுலகப் பிரபலங்கள் பலரும் படத்தின் பாடல் காட்சிகளைப் பாராட்டிப் பேசிய போதும், எழுத்தாளர்கள் கலந்துகொண்டதும், பேசியதும் சிறப்பாக அமைந்திருந்தன. இயக்குநர் சசியை இதற்காகவே பாராட்டலாம்.

– பரமன் கைலாஷ்

31-ம் பக்கத் தொடர்ச்சி

அவங்க நான் கேட்டதை உடனே அனுப்பி வச்சுட்டாங்க... உன்னோட வார்ட்ரோபைத் திறந்து பாரேன். வைர நெக்லஸ் டிசைன் பிடிக்கலைன்னா... உடனே மாத்திடலாம். பார்த்துட்டு சொல்லும்மா" முறுவலித்தார்.

"நீங்க எனக்கு அன்பா வாங்கித் தர்ற பிறந்த நாள் பரிசு ஆச்சே? அது எப்படி இருந்தாலும் எனக்கு ஓகே தான் அப்பா..." புன்னகைத்தபடி வெளியேறினாள்.

"இப்படிப்பட்ட பொண்ணு... பணிவும் பாசமும் பவ்யமும் கொண்ட மகள் கிடைக்க... நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" மெல்ல முணு முணுத்துக் கொண்டார்.

உள்ளுக்குள் ஏதுவோ உடைந்தது போலிருந்தது. அவரது முகம் சட்டென்று இருண்டது. கண்ணீர் சுரப்பிகள் தங்களது கட்டுப்பாட்டை இழந்தன.

தொண்டையை செருமிக் கொண்டு யோசனையில் தீவிரமாக மூழ்கினார் சிவராமன். 'இந்த சிக்கலை எப்படி விடுவிக்கப் போகிறேன்?' தலைமாட்டிலிருந்த மனைவி மீனாட்சியின் புகைப்படத்தை கண் கொட்டாமல் பார்த்தார்.

## 7

கிணற்று மேடையருகே இருந்த துணி துவைக்கும் கல்லில் அமர்ந்திருந்தான் தீபன். வேப்பமரம் தன் கிளைகளை அசைத்து சாமரம் வீசிக் கொண்டிருந்தது.

மேகக் குவியலிலிருந்து மெல்ல எட்டிப் பார்த்த நிலா, பாலொளியை சிந்தியது.

நகையை அந்த வீட்டில் திரும்ப ஒப்படைக்கச் சென்ற தீபன்... தன் மனதைப் பறிகொடுத்து விட்டு வந்திருந்தான்.

"இவ எங்க பொண்ணு வசுந்தரா... இவளுக்கு தான் கல்யாணம் வச்சிருக்கோம். இவ வசுந்தாவோட தோழி இனியா..." அந்த அம்மாள் அறிமுகம் செய்து வைத்தபோது... அந்த இனியா பிரமிப்புடன் கை கூப்பி வணக்கம் தெரிவித்தாளே?

ஆச்சரிய மிகுதியில் அழகிய இதழ்கள் இலேசாக விரிய... முத்துப் பல் வரிசை பளிச்சென்று மின்னின.

'இனியா... இனியா'

அந்த இனியவளுக்கேற்ற அழகான பெயர் தான்! அவளை இனி ஒரு முறை சந்திக்க முடியுமா?

தீபனின் உள் மனம் ஏங்கியது. இதுவரை எந்த ஆசாபாசங்களுக்கும் இடம் கொடுக்காமல்... கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று வாழ்ந்து விட்டவன் தான்!

'என் நிலைமை என்ன? இனியாவைப் பார்த்தால்... பெரிய இடத்துப் பெண் போல் பாந்தமாய் இருக்கிறாள்.

இதுவரை எத்தனை இளம் பெண்களைப் பார்த்திருக்கிறேன். பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவிகள் கூட என்னிடம் ட்யூஷன் கற்றுக் கொண்டிருக்கிறார்களே? ஆனால் இவளைப் பார்த்த மாத்திரத்தில் சட்டென்று அவள் மீது ஈர்ப்பு வந்து விட்டதே?

என்ன காரணம்? பூர்வ ஜென்ம பந்தமாய் இருக்குமோ? அவள் யாரோ? அவள் குடும்பப் பின்னணி எப்படியோ? எதுவுமே தெரியாத நிலையில்... அதுவும் ஒருவருக்கொருவர் ஒரு வார்த்தை கூடப் பேசிக் கொள்ளாத நிலையில்... கற்பனையை, ஆசையை மனம் போன போக்கில் வளர விடுவது ஆபத்தாயிற்றே?

எனக்கென்று என்ன இருக்கிறது? நல்ல பதவி, அந்தஸ்து என்று எதுவுமே இல்லாதவன். என்னைப் போன்ற இளைஞர்கள் மனதில் துளிர் விட்ட காதலை அப்படியே புதைத்து விட வேண்டியது தானா?

ஆம்! நடைமுறைக்கும் சற்றும் ஒத்து வராத விஷயத்தை எண்ணி உருகி மருகிக் கொண்டிருப்பது மதியீனம் தானே?'

தீபன் தன்னைத் தானே சாடிக் கொண்டு எழுந்தான். கூடத்திற்குப் பக்கத்திலிருந்த தனது அறைக்குள் புகுந்து விளக்கை அணைத்து விட்டு கட்டிலில் சாய்ந்தான்.

சில உணர்வுகளுக்கு தடை போடவே முடியாது. தடுக்க முயன்றால் தான் அது மேன்மேலும் பொங்கிப் பெருகி வெளிப்படும்.

இனியாவின் எண்ணம் சுற்றிச் சுற்றி வந்து அவனை வதைத்தது. தீபனின் நெஞ்சினுள் தேனூற்று பாய்ந்தது. அந்த இனிய சித்திரவதைக்கு ஆளானவனின் முகத்தில் புன்னகை அரும்பியது.

மறுநாள்... ஒரு இனிய அதிர்ச்சி அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தது.

"அப்பா! என்னை ஆசிர்வாதம் பண்ணுங்கப்பா" என்றபடி கால்களில் விழுந்து பணிந்த இனியாவின் உச்சந்தலையைப் பரிவுடன் வருடினார் சிவராமன்.

"தீர்க்காயுசா, சவுபாக்கியவதியா இரும்மா" பாசத்துடன் ஏற இறங்கப் பார்த்தார்.

மயில் கழுத்து வண்ணப் பட்டுப் புடவையில் கூடுதல் அழகுடன் மிளிர்ந்தாள் இனியா.

"இந்தப் புடவையும் வைர நெக்லசும் உனக்கு ரொம்பவே சூட் ஆகுது இனியா. மீனாட்சி இருந்திருந்தா... உனக்கு இன்னிக்கு திருஷ்டி சுத்திப் போட்டிருப்பா.... அம்மா படத்துக்கு முன்னே விழுந்து சேவிச்சுக்கோ... இந்தா!" தாம்பூலத்தில் ஒரு ரூபாய் நாணயத்தை சேர்த்து வைத்து அவளது கையில் திணித்தார்.

"கோவிலுக்குப் போய் உன் பெயருக்கு அர்ச்சனை பண்ணிட்டு வருவோமா?"

"வேண்டாம் அப்பா! கண் கண்ட தெய்வமா நீங்க இருக்கீங்க... பூஜை ரூம்லே பத்து நிமிஷம் கண் மூடி தியானிச்சாச்சு. அது போதும். எனக்கு ஆபீஸ்லே நிறைய வேலை இருக்கு. ஆபீஸை விட்டு வந்ததும் சாயந்தரமா... வேணும்னா போயிக்கலாம்பா"

"சரி, உன் இஷ்டம்!"

தாயின் படத்தை வணங்கி விட்டு எழுந்தவள்... தளரப் பின்னியிருந்த கூந்தலில் அரை முழம் ஜாதிப் பூவை சூட்டிக் கொண்டு நிமிர்ந்தாள்.

"ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்" அவசரக் குரலில் அழைப்பு விடுத்த செல் ஃபோனை எடுத்து 'ஆன்' செய்தாள்.

"ஹலோ"

"ஹாய் இனியா! குட்மார்னிங்... மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே.... டார்லிங்! ஐ லவ் யூ ஸோ மச் இனியா" அத்தான் சுந்தரின் குழைவான குரல்... அவளது செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது.

"ஓ... தே... தேங்க்யூ" உள்ளூர எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

"இனி டியர்! நல்ல இங்கிலீஷ்

> உறக்கம் தரும்
> கனவுகள்தான்
> உறங்கும் நிஜமா?
> ஆம் எனில்
> அப்படிய உறங்கட்டும்;
> காதல் வாழ!
> - தமிழ்நாயகி, சேலம்

படம் வந்திருக்கு. ரெண்டு டிக்கெட்ஸ் எடுத்திருக்கேன். படம் பார்த்துட்டு, அப்படியே ஈவ்னிங் கோவளம் பீச் வரைக்கும் போயி டைம் பாஸ் பண்ணிட்டு வருவோமா?

பீச்சுல வச்சு உனக்கு ஸர்ப்ரைஸா ஒரு கிஃப்ட் தரலாம்னு இருக்கேன். லஞ்ச் டைம் முடிஞ்சதும் ஆபீசுக்கு வந்து உன்னை நான் பிக்கப் பண்ணிக்கவா டார்லிங்?"

"வே... வேண்டாம். எனக்குப் பிடிக்கலை" பட்டென்று பதிலளித்தாள் இனியா.

"இனி!... நாம்ப அடுத்தமாசமே ஹஸ்பண்ட் அண்ட் வொய்ஃப். நமக்கு எங்கேஜ் மெண்ட் ஆயிடுச்சு. ஞாபகமிருக்கில்ல?" சுந்தரின் குரலில் கோபம் கொப்பளித்தது.

"நல்லா ஞாபகம் இருக்கு. எனக்கு பிடிக்கலைன்னா... விட்டுர வேண்டியது தானே? ப்ளீஸ்! என்னை வற்புறுத்தாதீங்க"

"பிடிக்கலையா? உன்னோட நடவடிக்கையே சரியில்லை இனி! பட்டும் படாமலும் விட்டேத்தியா நடந்துக்கிறே? பிடிக்கலை அப்படின்னா என்ன அர்த்தம்? படத்துக்கு வரப் பிடிக்கலையா? பீச்சுக்கு வரப் பிடிக்கலையா? இல்ல... என்னையே பிடிக்கலைன்னு சொல்றியா?"

"டோட்டலா எதுவுமே பிடிக்கலைன்னு அர்த்தம்"

அருவருப்புடன் முகம் சுளித்துப் பேசி விட்டு... பட்டென்று இணைப்பைத் துண்டித்தாள்.

ஒரு கணம் யோசித்து விட்டு 'செல்'லை 'ஆப்' செய்து வைத்தாள். "அப்பா! நான் பேங்குக்கு போயிட்டு அப்படியே ஆபீஸ் கிளம்பறேன்" கூறியபடியே ப்ரீஃப் கேஸில் செக் புக்கை எடுத்து வைத்தாள்.

ஹாலில் அலங்கார மேஜையிலிருந்த தொலைபேசி கிணுகிணுத்தது. தாடை இறுக ரிசீவரை எடுத்தார் சிவராமன்.

"ஹலோ"

"ஹலோ! மாமா... நான் சுந்தர் பேசறேன். உடம்புக்கு இப்போ பரவாயில்லையா மாமா?... நான் இனியா கிட்டே கொஞ்சம் பேசப் பிரியப் படறேன்"









**ந**மது 'குங்குமச்சிமிழ்' இதழில் துணுக்குகள் எழுதும் ஈரோடு க.ரவீந்திரன் அவர்களின் மகன் சுப்ராம் சஞ்சை – கோமதி ஆகியோரது திருமணம் கடந்த 1.9.2008இல் சென்னை திருமுல்லைவாயிலில் சிறப்பாக நடைபெற்றது. ஈரோட்டில் 5.9.2008இல் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் க.ரவீந்திரன் தொகுத்து எழுதி கங்கை புத்தக நிலையம், சென்னை–17. வெளியிட்ட 'தகவல் பூந்தோட்டம்', 'தகவல் முத்துக்கள்' ஆகிய பொது அறிவு நூல்கள் வழங்கப்பட்டன. மணமக்களை நாமும் வாழ்த்துவோம்.

அர்த்த பாவனையுடன் மகளை ஏறிட்டு விட்டு, "இனியா ஆபீசுக்கு கிளம்பிப் போய்ட்டாளே சுந்தர்" என்றார்.

ப்ரீஃப்கேஸில் முக்கியமான ஃபைலை வைத்து பத்திரமாக மூடிக் கொண்டிருந்த இனியா, விழிகள் விரிய சிவராமனையே பார்த்தாள்.

ரத்னச் சுருக்கமாக பதிலளித்து விட்டு ரிசீவரை வைத்தவரிடம் விடை பெற்றாள் இனியா.

காரைக் கிளப்பியவளின் மனம் குறுகுறுத்தது. 'சுந்தரிடம் வாஞ்சையாகப் பேசுவாரே அப்பா? மணிக்கணக்கில் பேசுபவர் இன்று சட்டென்று பேச்சைக் கத்தரித்து விட்டாரே?

அப்பாவுக்கு 'மைல்ட் அட்டாக்' வந்ததிலிருந்து அவர் அதிகம் பேசுவதில்லைதான்.

ஆனால் சுந்தரிடம் இன்று அவர் பேசிய விதம் மனதிற்கு நெருடலாக இருந்தது.

நான் வீட்டிலிருக்கும் போதே... ஆபீசுக்குப் போய் விட்டதாக ஏன் பொய் பேச வேண்டும்?

எனக்குத் தான் சுந்தரின் லீலா விநோதங்கள் தெரிந்து போய்... வெறுப்பில் பேசுவதைத் தவிர்க்கிறேன்.

ஆனால் அப்பா எதற்காக அவனைத் தவிர்க்கிறார்?' உள்ளுக்குள் அலை அலையாய் எழுந்த எந்த வினாவிற்கும் அவளால் விடையைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

## 8

பங்களாவை விட்டு வெளிப்பட்ட சிவராமன்... மெல்ல நடை பாதையோரமாக நடக்க ஆரம்பித்தார். அந்தத் தெருமுனையிலிருந்த 'வரசித்தி விநாயகர்' ஆலயத்தில்... வழக்கம் போல் பக்தர்களின் கூட்டம் திமுதிமுத்தது.

வெள்ளிக்கவசம்அணிந்துகொண்டுரோஜா மாலையை சூடிக்கொண்டிருந்த விநாயகர் பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருந்தார்.

மகள் இனியாவின் பிறந்த நாளை முன்னிட்டு... விநாயகரை தரிசித்துப் பிரார்த்தனை செய்தவர்... தளர்ந்த நடையுடன் பிரகாரத்தைச் சுற்றி வர ஆரம்பித்தார்.

இரண்டாம் சுற்று வந்த போது... யாரோ பக்தர்கள் அசட்டையாகச் சிந்தி விட்டுச் சென்ற எண்ணெய் மீது... அவர் கால் வைத்ததும்... பளிங்குத் தரை 'சரக்'கென்று வழுக்கி விட்டது.

"அ... அம்மா" அலறியபடி தடாலென்று விழுந்தார்.

"ஐயோ... யாரோ பெரியவர் விழுந்துட்டாரு"

"பாவம்! வயசானவரு... தூக்குங்க"

"என்னாச்சு? மயக்கம் போட்டா விழுந்துட்டாரு?"

கண்ணிமைக்கும் நேரத்தில்... ஆள் ஆளுக்கு குரல் கொடுத்தனர். சட்டென்று கூட்டம் கூடி விட்டது.

"தள்ளுங்க... கொஞ்சம் அந்தப் பக்கமா தள்ளி நில்லுங்க, காத்து வரட்டும். சார்! என்னாச்சு? அடி ஒண்ணும் பலமா படலையே?

அட... யாரோ எண்ணெய் கொட்டியிருக்காங்க... பாருங்க! அதான் வழுக்கி விழுந்திருக்காரு..." கரிசனத்துடன் கேட்டபடி கைத்தாங்கலாக அவரைத் தூக்கிப் பிடித்த இளைஞனை... மெல்ல நிமிர்ந்து பார்த்தார்.

திடுதிப்பென்று விழுந்துவிட்ட அதிர்ச்சியில் அவரது உடல் கிடுகிடுவென்று நடுங்கியது. குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

"சார்! பார்த்து... மெல்ல..." அவனது பிடி மேலும் இறுகியது.

"அ... அடி ஒண்ணும் படலைப்பா... திடீர்னு விழுந்துட்ட அதிர்ச்சி அவ்ளோ தான்" புன்னகைத்தார்.

"வீடு எங்கே சார் இருக்கு? வாங்க... என் ஆட்டோவில் கொண்டு விட்டுட்டுப் போறேன்"

"இதே தெரு தான். லாஸ்ட்டுல... நான் நடந்தே போயிடுவேன் தம்பி. உங்களுக்கு ரொம்ப ரொம்ப நன்றி"

"இதுக்கெல்லாம் போய் நன்றி சொல்லிட்டிருக்கீங்க சார். மனுசனுக்கு மனுசன் இந்த உதவி கூட செய்யலைன்னா... நாம பூமியில பிறந்ததுக்கு அர்த்தமே இல்லாம போயிடுமே! இதான் நம்ம ஆட்டோ... உட்காருங்க...

பரவாயில்லை உட்காருங்க... உடம்பு இன்னமும் இலேசா நடுங்குது பாருங்க... உங்களுக்கு பி.பி. ஏதும் இருக்கா சார்?"

அதற்குமேல் சிவராமனால் மறுக்க முடியவில்லை. ஆட்டோவில் ஏறி அமர்ந்தார்.

"பி.பி. இருக்கு தம்பி"

"அதானே பார்த்தேன். பி.பி., சுகர் ரெண்டுமே வரக்கூடாத நோய்கள் சார்! வீட்டுக்குப் போனதுமே மாத்திரை போட்டுருங்க சார்..."

அடுத்தவரின் நலனில் அக்கறை காட்டியபடி விகல்பமில்லாமல் பேசிய அந்த வாலிபனை... அவருக்கு நிரம்பவே பிடித்துவிட்டது.

"உன் பேர் என்ன தம்பி?"

"தீபன்! இந்தப் பக்கம் ஒரு கஸ்டமரை ட்ராப் பண்ண வந்தேன். போற

வழியிலே விநாயகரை தரிசனம் பண்ணிட்டு போலாம்னு தான் கோவிலுக்கு வந்தேன்."

"தீபன்! நிப்பாட்டுப்பா... இதோ இதான் நம்ம வீடு!" இறங்கியபடி சட்டை பாக்கெட்டில் கையை நுழைத்தவரை... சட்டென்று தடுத்தான் தீபன்.

"சார்! மனிதாபிமான அடிப்படையில ரொம்ப சின்ன உதவி. பணமெல்லாம் கொடுத்து கொச்சைப் படுத்திடாதீங்க... என் மனசு வருத்தப்படும்"

அனிச்ச மலராய் வாடிப் போன தீபனின் முகத்தைப் பார்த்ததும்... சிவராமன் நெகிழ்ந்து விட்டார்.

"தீபன்! எனக்காக... மறுக்காம வீட்டுக்குள்ளே வரணும். ஒரு கப் காபியாவது சாப்பிட்டுப் போகணும். வரசித்தி விநாயகரை தரிசிக்க வர்றப்பெல்லாம்... இனிமே இந்த வயசான சிநேகிதனையும்... ஒரு நடை வந்து பார்த்துட்டுப் போகணும். செய்வியா?"

"செய்துட்டா போச்சு!" என்றபடி அவரோடு இணைந்து மெல்ல நடந்தான்.

வரவேற்பறையில் அவனை அமரவைத்து விட்டு அருகில் உட்கார்ந்த சிவராமன் "வேலய்யா! ரெண்டு கப் காபி கொண்டாப்பா" சற்று குரலுயர்த்தி உத்தரவிட்டார்.

"சார்? இன்னமும் உங்களுக்கு கை நடுக்கம் நிக்கலை பாருங்க... முதல்லே பி.பி. மாத்திரை போட்டுருங்க"

"உம்! போட்டுடலாம்... மாத்திரையை போடறதுன்னாலே... எனக்கு எட்டிக் காயாக கசக்கும். என் மக இனியா கிட்டக்க இருந்து அன்பா அதட்டி என்னை விழுங்க வைப்பா... இன்னிக்கு அவளோட பிறந்தநாள். அதான் கோவிலுக்கு வந்திருந்தேன். மதியம் நான் போட்டுக்க வேண்டிய மாத்திரைகளைப் பிரிச்சு டேபிள் மேலே வச்சுட்டுத்தான்... அவ ஆபீசுக்கு கிளம்புவா...

லஞ்ச் சாப்பிட்டதும் மறக்காம மாத்திரையைப் போடுங்கப்பா... எனக்காக... டிமிக்கி அடிக்காம சாப்பிடுங்கன்னு... ஒரு மணிக்கு ஒரு ஃபோன் அடிச்சுடுவா" சிவராமன் மேற்கொண்டு பேசியது எதுவும் தீபனின் செவிகளில் விழவில்லை.

'இனியா... இனியாவா?' நெஞ்சுக்குள் ஒரு சிலிர்ப்பு பொங்கியது.

இவரது மகளின் பெயர் இனியாவா? ஒரு வேளை அந்த 'இனியா'வாக இருக்குமோ? இவளே அந்த 'இனியா'வாக இருந்து விட்டால்?

இவரது நீள் வட்ட முகமும் கூர் மூக்கும், கண்களும்... அவளை ஞாபகப் படுத்துகின்றனவே? எனக்கும் அவளுக்கும் ஏணிவைத்தாலும் எட்டாதே? இவ்வளவு பெரிய செல்வந்தரின் மகளா இனியா?' எண்ணமிட்டபடி பார்வையாலேயே அந்த பிரமாண்ட ஹாலை வலம் வந்தான். நிமிடங்கள் நரகமாய் நகர்ந்தன.

## 9

வங்கியை விட்டு வெளியே வந்த இனியா... ப்ரீஃப்கேஸை முன் இருக்கையில் வைத்து விட்டு... காரை உசுப்பி அலுவலகத்தை நோக்கி விரைந்தாள்.

அலுவலகத்தை அடைந்ததும், அக்கவுண்டட்டை அழைத்து பல உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு... மேஜையின் மேலிருந்த ஃபைலைப் புரட்டி கையெழுத்திட்டு விட்டு நிமிர்ந்த போது... டெலிபோன் மணி அவளை அழைத்தது.

"ஹாய் இனி டார்லிங்! நான் தான் சுந்தர் பேசறேன். இன்னிக்கு நான் உன்கிட்ட மனசு விட்டுப் பேசியாகணும். நீ ஆபீசுக்கு வந்துட்டதா மாமா சொன்னாரு... இன்னும் ஒரு பத்து நிமிஷத்துல நான் அங்கே இருப்பேன்"

அவள் மறுத்துப் பேசும்முன் டக்கென்று மறுமுனையில் ரிசீவரை வைத்து விட்டான் சுந்தர்.

'செல்லை ஆஃப் பண்ணி வைத்ததால்... லேண்ட் லைனில் தொடர்பு கொண்டு விட்டான். ரிசப்ஷனிஸ்ட்டும் யோசிக்காமல் இணைப்பைக் கொடுத்து விட்டாளே? பாவம்! அவள் என்ன செய்வாள்? இனியா மேடத்தின் வருங்கால கணவன் சுந்தர் கேட்கும் போது... அவளால் மறுக்கவா முடியும்?

எனது விருப்பு வெறுப்பைப் பொருட்படுத்தாமல்... அவன் இஷ்டத்திற்கு ஆபீசுக்கு வருகிறானே?

ஏற்கனவே கோபத்தில் இருக்கிறான். பிலு பிலு வென்று சண்டை பிடிக்கத் தான் கிளம்பி விட்டான்.

வீட்டிற்கு வந்து பேசுவது தானே? இங்கு... ஏ.ஸி. அறைக்குள் தனிமையில் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறதாம்?

அவனது 'சுயரூபத்தைப்' பற்றி நன்கு தெரிந்து கொண்ட பின்... அவனைப் பற்றிய ஞாபகம் வந்தாலே... உடம்பெல்லாம் பற்றி எரிகிறதே?

இவனை எப்படி அவாய்ட் பண்ணுவது?'

நெற்றியைச் சுருக்கி யோசித்த வேளையில்... மீண்டும் தொலை பேசி சிணுங்கியது.

"ஹலோ"

"ஹலோ இனி! நான் வசு பேசறேன். இன்னிக்கு உங்க வீட்டுக்கு எங்க அம்மாவும் அப்பாவும் இன்விடேஷன் வைக்க வர்றாங்க. நானும் கூட வரலாம்னு இருக்கேன். நீ கிளம்பி உங்க வீட்டுக்கு வந்துடு.


நாங்களும் வந்துடறோம். இன்னும் கொஞ்சநாள்லே நாம்ப பிரிஞ்சுடப் போறோமே? அதுக்கு அப்புறம் எப்போ நேரம் கிடைச்சு எப்படி சந்திக்கப் போறோமோன்னு... கவலையா இருக்கு இனி. உங்க வீட்டுல இன்விடேஷனை வச்சுட்டு... அம்மாவும், அப்பாவும் இன்னும் நிறைய வீடுகளுக்குப் போகப் போறாங்க. நான் இன்னிக்கு சாயந்தரம் வரை உன் கூடவே இருந்துட்டுப் போறேன் இனி!

என்ன இனி? பேச்சையே காணோம்?"

"ரொம்ப சந்தோஷம் வசு! நீங்க வீட்டுக்கு வந்துடுங்க... நான் இதோ கிளம்பிட்டே இருக்கேன். பை!"

இனியாவுக்கு மனதிலிருந்த பெரும் பாரம் இறங்கியது போலிருந்தது.

'அப்பாடா... சுந்தரின் தொந்தரவிலிருந்து தப்பித்தோம்' என்ற திருப்தியில் விழுந்தடிக்காத குறையாக... அலுவலகத்தை விட்டு வெளியேறி... காருக்குள் ஏறி அமர்ந்தாள்.



**ஓ**ணம் பண்டிகையையொட்டி திருவனந்தபுரத்தில் 'பூக்காலம்' என்ற தலைப்பில் இந்து நாளிதழ் கோலப் போட்டி ஒன்றை நடத்தியது. அதில் இடம் பெற்ற கோலங்கள் இவை.

- க.ரவீந்திரன்

விமர்சனம்

திரைப்படம் ஒன்றை இயக்கிய பிறகுதான் காதலியைமணப்பதுஎன்கிற உறுதியோடு இருக்கும் இளைஞன், அதற்காக எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் அடுக்கடுக்கான தோல்விகளையே சந்தித்த போதிலும், எப்படி மேலும் மேலும் முயற்சிகள் செய்கிறார் என்பதை விவரிப்பதே படத்தின் பிரதான காட்சிகளாக அமைந்துள்ளன. இறுதியில் அவர் வெற்றிபெற்றாரா, இல்லையா என்பதை மிகவும் சுவாரஸ்யமாகவும் உணர்ச்சிமயமாகவும் சொல்லியிருக்கிறார்கள். (ஆங்கில வசனங்களே அதிகம் என்பதால் வெளிநாட்டுப் படம் பார்க்கிற பிரமை ஏற்படுகிறது.)

## முதல் முதல் முதல் வரை...

ஹயக்கிரீவ் (புதுமுகம் சி.பி.சத்யஜித்) சிந்து (அனுஜா அய்யர்) இருவரும் காதலர்கள். சிந்துவுக்கு திருமணம், குழந்தைகள் என்று ஆசை இருப்பினும், காதலன் திரைத்துறையில் வெற்றிபெற வேண்டும் என்கிற ஆர்வமுடன் காத்திருக்கிறார். சிந்துவுக்கு உடல் நலக்கோளாறு; ஆறு மாதத்தில் அவர் உயிரிழக்க நேரும் என்ற நிலை. எனவே காதலியை மணந்து கொண்டு, பிறகு சினிமாவில் சாதிக்கலாம் என்று எண்ணுகிறார் ஹயக்ரீவ். தன் இறப்பும் இழப்பும் அவரை வேதனையில்

இனியாவின் பங்களாவுக்கு வெகு சமீபத்தில் தான்... வசுந்தராவின் வீடு இருப்பதால்... வசுந்தராவும் அவளது பெற்றோர்களும் இனியா வருவதற்கு முன்பே... அந்த பங்களாவுக்கு வந்து விட்டிருந்தனர்.

"வணக்கம் அப்பா! நல்லாயிருக்கீங்களா?"

"அட வாம்மா வசுந்தரா. சவுக்கியந்தானே? வாங்க... வாங்க சார்... உட்காருங்க அம்மா" சிவராமன் மலர்ந்த முகத்துடன் உபசரித்தார்.

"அட... தீபன்... தீபன் தம்பியா? எப்படி இருக்கீங்க தம்பி?" வசுந்தராவின் தகப்பனார் அவனது கையைப் பிடித்துக் கொண்டார்.

"இந்த தீபனை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?" சிவராமன் இருவரையும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே கேட்டார்.

"என்ன சார் இப்படி கேட்டுட்டீங்க? இந்த தீபன் மட்டும் இல்லேன்னா... எங்க வசுவோட கல்யாணமே நின்னு போயிருக்கும். கல்யாணம் நின்னு

தள்ளிவிடும் என்பதால், காதலன் முதல் திரைப்படத்தை எடுத்த பின்பே திருமணம் என்பதில் உறுதி காட்டுகிறார் சிந்து.



இந்த பாசப் போராட்டத்தின் பின்னணியில் சம்பவங்கள் விரைவதால், படம் ஒருவித உருக்கத்துடன் நம் மனம் தொடுகிறது. கடைசியில் காதலி உயிர்ப்பிழைக்க, இயக்குநர் ஹயக்கீரிவனின் உதவி இயக்குநர் மகேஷ் உயிரிழப்பதில் படம் நிறைவடை கிறது. மகேஷ் உயிரிழப்பு ஹயக்கீரிவனின் வெற்றிக்கு எவ்வாறு அடித்தளம் அமைக்கிறது என்பது நெகிழ்வான விஷயம்.

முதற்காதல், முதல் முத்தம், பாலியல் உணர்வுகள் தோன்றிய முதல் அனுபவங்கள் போன்றவை (பிளாஷ் பேக் காட்சிகளாக) விரிவாகப் பேசப்படுவதால், படத்தின் தலைப்பும் அவ்வாறே அமைந்துள்ளது.

இயக்குநர் கிருஷ்ணன் சேஷாத்ரி கோமடம் உண்மையாகவே ஒரு வித்தியாசமான முயற்சியில், அருமையான திரைப்படத்தை உருவாக்கியிருக்கிறார். பாராட்டலாம்.

-கௌதம நீலாம்பரன்

*போன அவமானத்துல... எங்க குடும்பம் எந்த கதிக்கு ஆளாயிருக்கும்னு... என்னால கற்பனை பண்ணிப் பார்க்கவே பயமாயிருக்கு" தழுதழுத்தபடி நடந்ததை விலாவாரியாக எடுத்துரைத்தார்.*

*"இந்தக் காலத்துல இப்படியொரு பிள்ளையைப் பார்க்கவே முடியாது சார்!*

*அழைப்பிதழ் குடுக்கிறதுக்காக நானும் என் மனைவியும் தீபனோட வீட்டுக்குப் போயிருந்தோம். இந்தப் பிள்ளை எம்.காம் மட்டுமில்லாம சில கம்ப்யூட்டர் கோர்ஸ்களையும் முடிச்சிருக்கானாம். நல்ல வேலை கிடைக்கலை போலிருக்கு... அதுக்காக விரக்தி அடைந்து கவர்ண்மெண்ட்டையும் தலை எழுத்தையும் திட்டி நொந்துகிட்டு ஊர் சுத்தாம... தனக்கு தானே வேலையை உருவாக்கிட்டான்.*

*சுயமா சொந்தக்கால்லே நிக்கிறான். பெத்தவங்களுக்கு பாரமில்லாம... சுய பச்சாதாபப் படாம உழைச்சிட்டிருக்கான். ட்யூஷன் சென்டரை ஆரம்பிச்சு காலை, மாலை நேரங்கள்லே உழைக்கிறது போதாதுன்னு... ஷேர்*

ஆட்டோவை வாங்கி பகல் நேரத்துல ஓட்டிக்கிட்டுருக்கான்.

இவனோட நேர்மையான கண்ணியமான குணத்தைத் தெரிஞ்சுகிட்டு... பள்ளி, கல்லூரிகள்லே படிக்கிற பொண்ணுங்களை... அவங்களைப் பெத்தவங்க தைரியமா... இவன் கிட்ட ட்யூஷனுக்கு அனுப்பி வைக்கிறாங்க. எல்லாத்தையும் கேள்விப்பட்டதும் திகைச்சுப் போயிட்டோம்.

நேர்மை, பணிவு, தன்னடக்கம், ஒழுக்கம் மனிதாபிமானம் பண்பு... இப்படி எல்லா நல்ல குணங்களையும் ஒட்டு மொத்தமா... தீபன் தம்பி குத்தகைக்கு எடுத்துக் கிட்டாரு போலிருக்கு.

இப்படிப்பட்ட ஒரு பிள்ளை பெத்தெடுக்க, இவரோட பெத்தவங்க என்ன புண்ணியம் பண்ணினாங்களோ தெரியலை சார்" அவர் சிலாகித்துப் பேசிக் கொண்டே போனதும்... சிவராமனின் இருண்ட முகத்தில் பளீரென மின்னல் வெட்டியதைப் போல்... சந்தோஷ வெளிச்சம் பரவியது.

வசுந்தராவின் அப்பா தீபனைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போதே... இனியாவும் வந்து விட்டிருந்தாள்.

தீபனைப் பற்றிய பேச்சை... வராண்டாவில் நுழையும் போதே அவள் கேட்டு விட்டாள்.

அவளையும் அறியாமல் உற்சாகத்துடன் நடையை எட்டிப் போட்டாள்.

காது குளிர தீபனைப் பற்றி குதூகலமாய் கேட்டுக் கொண்டே ஹாலுக்குள் நுழைந்தவள்... தீபனே அங்கு அமர்ந்திருப்பான் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை.

இனியாவை நேரில் பார்த்த தீபனுக்கு திக்கென்றிருந்தது. நான்கு விழிகளும் மோதிக் கொண்டன.

"நீங்க சொல்றது வாஸ்தவம் தான் சார்! இன்னிக்கு இனியாவோட பிறந்தநாள். தெருமுனையில இருக்கிற வரசித்தி விநாயகர் கோவிலுக்குப் போய் வேண்டிக்கிட்டு... பிரகாரத்தைச் சுத்தி வர்றப்போ... திடீர்னு வழுக்கி விழுந்துட்டேன்.

கூட்டம் கூடி எல்லாரும் சுத்தி நின்னு வேடிக்கை பார்க்கிறாங்களே தவிர... யாரும் கைத் தாங்கலா தூக்கி விட்டு உதவ முன் வரலை. பதட்டத்துல கை, கால் நடுங்க ஆரம்பிச்சிருச்சு. இந்த தீபன் தம்பி தான் என்னைத் தூக்கி...

கைப்பிடியா அழைச்சுக்கிட்டு ஆட்டோவில் உட்கார்த்தி என்னை இங்கே கூட்டிக்கிட்டு வந்தாரு.

வாசலோட போகப் பார்த்த தம்பியை... வற்புறுத்தி வீட்டுக்கு உள்ளே கூப்பிட்டு உட்கார வச்சேன். ரெண்டு பேரும் பேசிக்கிட்டே காபி சாப்பிட்டுட்டு இருந்தோம். நீங்க கரெக்டா வந்துட்டீங்க"

"இதெல்லாம் சாதாரண விஷயம். பெரியவங்க நீங்க எல்லாரும் இதைப் பெரிசு படுத்திப் பேசிட்டிருக்கீங்க... எனக்கு கூச்சமாயிருக்கு... ஓகே சார்! எனக்கு நேரமாச்சு. நான் வரேன் சார். மிக்க நன்றி!" சட்டென்று தீபன் எழுந்து கொண்டான்.

"நாம்ப அடிக்கடி சந்திக்கணும் தீபன்" என்ற சிவராமனைப் பார்த்து புன்னகை பூத்தான்.

"கண்டிப்பா... விநாயகரைப் பார்த்த கையோடு உங்களையும் வந்து சந்திக்கிறேன் சார்" கை கூப்பி விடைபெற்றான்.


கடைசியாக இனியாவைக் கடந்து செல்லும் போது... அவளைப் பார்வையாலேயே இதமாக வருடி விட்டுச் சென்றான்.

அந்தப் பார்வை மெல்லிய பூஞ் சிறகின் வருடலாய்... மனதிற்குள் புது சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

திக்பிரமை பிடித்தவளைப் போல் நின்றிருந்தவள்... திடீரென்று தன் உணர்வு பெற்றவளாய் அவனைப் பின்தொடர்ந்து சென்றாள்.

தீபன் தோட்டத்தைக் கடந்து கொண்டிருக்கும் போது... ஓட்டமும் நடையுமாக அவனை நெருங்கினாள்.

"மிஸ்டர் தீபன்! எ... எங்கப்பாவை பத்திரமா வீட்டுல கொண்டு வந்து சேர்த்திருக்கீங்க... அவர் ஒரு ஹார்ட் பேஷண்ட் ... தக்க சமயத்துல உதவியிருக்கீங்க... ரொம்ப ரொம்ப நன்றி!"



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் ஒபாமாவின் உருவங்கள் பொறிக்கப்பட்ட காலணிகள் பிரச்சாரத்திற்காக இப்படிப் பயன்படுத்தப்படுகின்றன. இது மதிப்பின் அடையாளமா, மிதிப்பின் அடையாளமா?

- க.ரவீந்திரன்

கண்கள் பனிக்கக் கைகளைக் கூப்பினாள் இனியா.

"மை காட்! ஆள் ஆளுக்கு 'தேங்க்ஸ்' சொல்லி ரொம்ப சங்கடப் படுத்தறீங்களே? இட்ஸ். ஓகே! மெனி மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே' ... மிஸ். இனியா!

உங்கப்பா இன்னிக்கு உங்க பிறந்தநாள்னு சொல்லிக் கிட்டிருந்தாரே? இப்படியொரு சூழ்நிலையில நான் உங்களை சந்திப்பேன்னு... கனவுலே கூட நெனச்சுப் பார்க்கலை. ஆல் தி பெஸ்ட்! வாழ்த்துக்கள்!"

குப்பென்று இனியாவின் முகம் குங்குமமாய் சிவந்து போனது.

"தேங்க் யூ... ஒரு அற்புதமான மனிதரோட வாழ்த்துஎனக்கு கிடைச்சிருக்கே? அதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும். நல்லவங்களோட வாக்கு பலிதமாகும்னு... பெரியவங்க சொல்லுவாங்க... அதுக்கும் சேர்த்து உங்களுக்கு நன்றி சொல்லிக்கிறேன். நானும் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்கலை. நம்ம வீட்டுக்கு தீபன் சார் வந்திருக்காரே? இது கனவா நெஜமான்னு திகைச்சுப் போயிட்டேன். அப்பா கேட்டுக் கொண்டபடி... நீங்க அடிக்கடி வந்து போகணும்." என்ற இனியாவின் மனதிற்குள் மத்தாப்பூ சிதறல்!

"அவசியம் வர்றேன். நான் வரட்டுமா? பை!" கூறி விட்டு கேட்டைத் தாண்டி ஆட்டோவுக்குள் அமர்ந்து அதை ஓட்டியவனுக்கு... ஆனந்த சாரலில் நனைவது போலிருந்தது.

## 10

சிந்தனைகளின் வலைப் பின்னலில் சிலந்தியாய்... இனியாவின் மனம் சிக்கிக் கொண்டதில்.... அன்றும் அவளுக்கு வேலையே ஓடவில்லை.

நேற்று அவள் வசுந்தராவிடம் ஃபோனில் பேசிய பின்பு... அவசரமாக வீட்டிற்குக் கிளம்பிச் சென்றதும்... சுந்தர் ஆபீசுக்கு வந்திருந்தானாம்.

அவள் வீட்டிற்குச் சென்று விட்டாள் என்று தெரிந்ததும்... கோபாவேசமாக புயல் போல் சுந்தர் விருட்டென்று வெளியேறினான் என்று கிளார்க் அவளிடம் தெரிவித்தான்.

'நாட்கள் நெருங்குகின்றன. திருமணத்தை எப்படி நிறுத்துவது? அப்பா

தேறிவிட்டார். கோவில் குளத்திற்கு சுற்றி வரக் கிளம்பும் மனிதர்... இரண்டொரு நாட்களில் பத்திரிகை விநியோகம் செய்ய ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது?

அப்பா தான் கொஞ்சம் தேறி விட்டாரே? விஷயத்தைப் போட்டு உடைத்து திருமணத்தை நிறுத்தச் சொன்னால் என்ன?

முழுவதும் தேறி விட்டார் என்றும் கூற முடியவில்லையே?

கீழே விழுந்து விட்ட அதிர்ச்சியில்... பி.பி. எகிறி உடம்பு தந்தி அடிக்க ஆரம்பித்து விட்டதாமே? அதிர்ச்சி தரும் தகவலை எப்படி தைரியமாக... அவரிடம் கூற முடியும்?

எது எப்படியோ... அவருக்கு தீபனை மிகவும் பிடித்து விட்டது. தீபன் அவர் மனதில் நிரந்தரமாக இடம் பிடித்து விட்டான்.'

தீபன் நன்கு படித்த இளைஞன் என்று கேள்விப்பட்டதும்... இனியா இரட்டிப்பு சந்தோஷம் அடைந்திருந்தாள்.

ஆனால் 'படித்தவன்' என்ற கவுரவம் பார்க்காமல்... ஆட்டோ ஓட்டி 'உழைப்பே உயர்வு' என்ற ரீதியில் தன்னம்பிக்கையுடன் செயல் படுகின்றானே?

'உங்களை இப்படியொரு சூழ்நிலையில் நான் சந்திப்பேன்னு கனவுலே கூட நெனச்சுப் பார்க்கவில்லை' என்று தீபன் நேற்று அவளிடம் கூறினானே?

அப்படியென்றால்... என்னை மீண்டும் சந்திப்பதற்கு அவன் ஏங்கியிருக்கிறான் என்று தானே அர்த்தம்?

என் மனதில் தீபன் இருப்பதைப் போல... தீபன் மனதிலும் நான் இருக்கிறேனா?

ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும். அந்தப் பார்வை வருடலும் அந்தக் கண்களில் தெரிந்த பிரகாசமும்... அவனும் என் மீது காதல் வயப்பட்டிருப்பதாகத் தான் தெரிகின்றது.

இந்தக் காதல் நிறைவேறுமா? அப்பா பச்சைக்கொடி காட்டுவாரா?

ஐயோ! நான் ஒரு மக்குப் பெண். முதலில் திருமணத்தை நிறுத்த வேண்டுமே? அதற்கு ஒரு வழியும் புலப்படாமலிருக்கும் போது... அடுத்த கட்டத்தைப் பற்றி கவலைப்படுவானேன்?

டாக்டர். தேவசகாயம் அங்கிள் இதைப் பற்றி திரும்பவும் என்னிடம் பேசவே இல்லையே?

கழுத்திற்கு கத்தி நெருங்குவதைப் பற்றி நான் தானே கவலைப் பட்டாக வேண்டும்?

சுந்தரின் விவகாரத்தை டாக்டர் அங்கிளிடம் கொட்டித் தீர்த்தாகிவிட்டது. மனதில் அரும்பிய காதலைப் பற்றி யாரிடம் சொல்லி ஆறுதல் தேடுவதாம்?

சிவராமன் பண்பான மனிதர். பணத்தை விட பண்புக்கு மிகவும் மரியாதை கொடுப்பவர். அந்தஸ்து பேதத்தை அவர் பொருட்படுத்தவே மாட்டார்.

தீபனுக்கு அவளை தாராளமாக தாரைவார்த்து கட்டிக் கொடுத்து விடுவார். ஆனால் அவராக மனம் கனிந்து இறங்கி வர வேண்டும்.

காதல் கத்தரிக்காய் என்று அவரிடம் அவள் வாயைத் திறக்க முடியாது. ஏற்கனவே ரகு அண்ணா வேறு அவரைப் பலமாகக் காயப் படுத்தியிருக்கிறான்.

சுந்தர் வேறு எந்த நேரத்திலும் ஆபீசுக்குள் புகுந்து அவளிடம் கலாட்டா செய்வதற்கு வாய்ப்பிருக்கிறதே? என்ன செய்யப் போகிறேன் நான்?

ஐயோ அம்மா! நடுக்கடலில் மூழ்கிட்டிருக்கேனே? துரும்பு கிடைச்சாப் போறும். அதைப் பிடிச்சுகிட்டு நீந்திக் கரையேறிடலாம். எப்படியாவது என்னைக் காப்பாத்தி விடும்மா' மானசீகமாக அம்மா மீனாட்சியை... அவள் கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டாள்.

திடீரென்று அவளது செல் ஃபோன் கிணுகிணுத்தது. திரையில் மின்னி மின்னிச் சிரித்த நம்பரைப் பார்த்தாள்.

அப்பா சிவராமன்!

"சொல்லுங்கப்பா! உடம்புக்கு ஒண்ணுமில்லையே?" பதறினாள்.

"சதா அதைப் பத்தின கவலை தான் உனக்கு! எனக்கு ஒண்ணும் இல்லைடா கண்ணா. நம்ம ஆபீசுக்கு புதுசா புரொடக்ஷன் மேனேஜரை நான் அப்பாயிண்ட் பண்ணிட்டேன். இன்னிக்கே ஜாயின் பண்ணச் சொல்லிட்டேன். இன்னிக்கு இராகு நேரம் முடிஞ்சதும் அவர் வந்துடுவாரு."



ஜப்பானிய இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்து 'நாயர் சான்' என்ற படம் ரூ.200 கோடி செலவில் தயாராகிறது. இதில் மோகன்லால், ஐயப்பன் மாதவன் நாயர் என்ற பாத்திரத்தில் நடிக்கிறார். இதற்காக மோகன்லால் ஜப்பானிய மொழியைக் கற்று வருகிறாராம். ஹாலிவுட் நடிகர் ஜாக்கிசானும் இதில் நடிக்கிறார். மோகன்லால் ஊதியத்தைவிட ஜாக்கிசானுக்கு ஆறு மடங்கு ஊதியம் அதிகமாக அளிக்கப்படுகிறதாம்!

– க.ரவீந்திரன்



"எப்படிப்பா? இன்னும் பேப்பர்லே கூட விளம்பரம் தரலையே?"

"எல்லாம் நேரம் காலம் கூடி வந்தா... தன்னால நடக்கும். தகுதி வாய்ந்த கேண்டிடேட்! அவர் வந்ததும் பேசி ஃபார்மாலிட்டீஸை முடிச்சிட்டு... என்னோடு பேசு. சரியாடா?" பட்டென்று செல்ஃபோனை அணைத்து விட்டார்.

'யார் அவர்? தகுதி வாய்ந்த கேண்டிடேட்டை அப்பா எங்கே இருந்து பிடித்தார்? இராகு காலம் முடிந்ததும் அவர் வந்து விடுவாரா?

இன்றைக்கு வெள்ளிக்கிழமை! அப்படியென்றால் பன்னிரெண்டு மணிக்கு இராகுகாலம் முடிந்து விடுமே?

மணி பன்னிரெண்டு ஆகி விட்டதே? இன்று காலை நான் வீட்டை விட்டுப் புறப்படும் போது கூட... 'புரொடக்ஷன் மேனேஜர் விஷயத்தைப் பற்றி அப்பா எதுவும் சொல்லவில்லையே?

இடைப்பட்ட மூன்று மணி நேரத்திற்குள் அப்பா ஏதேதோ வேலை செய்திருக்கிறாரே? எப்படி?

யார் அந்த நபர்? வர வர அப்பா பூடகமாகவே பேச ஆரம்பித்து விட்டார். தகுதி வாய்ந்தவர் என்று அப்பா எப்படி முடிவெடுத்தார்? இருக்கும் குழப்பம் போதாதென்று... இதென்ன புதுக் குழப்பம்!'

ஹேண்ட் பேக்கைத் திறந்து தலைவலி தைலத்தை எடுத்து நெற்றியில் அதை இலேசாக நீவி விட்டுக் கொண்டாள் இனியா.

"மே ஐ கமின் மேடம்"

"எஸ்! கெட் இன் சைட் ப்ளீஸ்" என்றபடி நிமிர்ந்தாள்.

ஃபைலை மார்போடு அணைத்தபடி உள்ளே நுழைந்தவனைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டது. தீபன்!

அவளையும் அறியாமல் சட்டென்று எழுந்து நின்றாள்.

"வெ... வெல்கம் மிஸ்டர் தீபன்! நீங்க வருவீங்கன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை. நிக்கிறீங்களே?... ப்ளீஸ் டேக் யுவர் ஸீட்"

"தேங்க் யூ! நானும் இன்னிக்கு காலையிலே பத்து மணிக்கு சிவராமன் சார் எங்க வீட்டுக்கு வருவார்னு... கொஞ்சமும் எதிர்பார்க்கலை.

வந்ததும் என் சர்ட்டிபிகேட்ஸை பார்க்கணும்னு சொன்னாரு.

பார்த்து முடிச்சதும் 'நம்ம ஆபீஸ்லே... புரொடக்ஷன் மேனேஜரா உங்களை அப்பாயின்ட் பண்ணிட்டேன்னு அவர் சொன்னதும்... எனக்கு ரொம்பவே ஸர்ப்ரைஸாயிடுச்சு.

இதுவே வேறே யாரோ வந்து... கூப்பிட்டிருந்தா நிச்சயம் மறுத்திருப்பேன். ஒரு சின்ன உதவி பண்ணினதுக்கு... பிரதி உபகாரமா வேலை போட்டுத் தர்றாங்களே'ன்னு... மனசுக்கு தோணும். நானும் மறுத்திருப்பேன்.

ஆனா என்னவோ தெரியலை. என்னால மறுக்க முடியலை.

'இந்த வயதான சிநேகிதனோட வார்த்தையை நீங்க தட்ட மாட்டீங்கன்னு நான் நம்பறேன்' அப்படின்னு சிவராமன் சார் சொன்னாரு.

அது மட்டுமே காரணமில்லை. பணக்கார தோரணை எதுவும் இல்லாம நீங்க பழகற விதம்... உங்க அணுகுமுறை எல்லாமே என் மனசுக்கு ரொம்ப பிடிச்சதாலே... ஒத்துகிட்டேன்." என்று கூறிக் கொண்டே சர்ட்டிபிகேட்ஸ் அடங்கிய ஃபைலை அவளிடம் நீட்டினான்.

"ஃபைல் உங்க கிட்டேயே இருக்கட்டும். அப்பா பார்த்துட்டாரே, அது போதும். இந்த ரிகார்ட்ஸ், ஃபைல்லை புரட்டிப் பாருங்க...

உங்க வேலையைப் பத்தின டீடெய்ல்ஸ் எல்லாமே அதுலே இருக்கு...

கீழ் தளத்துல உற்பத்திப் பிரிவு இருக்கு. நானே உங்களை அழைச்சிட்டுப் போறேன். அதுக்கு முன்னாடி நம்ம ஆபீஸ் ஸ்டாஃப் அத்தனை பேத்துக்கும்

உங்களை அறிமுகப்படுத்தி வைக்கணும்." புன்னகைத்த படி கூறியவள்... இன்டர்காமில் கிளார்க்கை அழைத்தாள்.

"நம்ம ஆபீஸ் ஸ்டாஃப் அத்தனை பேரையும்.. கான்ஃபரன்ஸ் ஹாலிலே உடனே அசெம்பிள் பண்ணச் சொல்லுங்க... நம்ம ஆபீசுக்கு புது புரொடக்ஷன் மேனேஜர் வந்திருக்காரு... அறிமுகப் படுத்தணும்" உத்தரவிட்டு விட்டு நிமிர்ந்தாள்.

"இந்த போஸ்ட்டுக்கு தகுதி வாய்ந்த நபர் வாய்க்கலையேன்னு... கவலைப்பட்டுக்கிட்டே இருந்தேன். மலை மாதிரி மனசை அழுத்திக் கிட்டிருந்த கவலை... நீங்க வந்ததும் சூரியனைக்கண்ட பனி மாதிரி விலகிப் போயிடுச்சு. நேர்மையான கண்ணியமான மனிதரை அப்பா அப்பாயிண்ட் பண்ணியிருக்காரே? ரியலி அயாம் வெரி ஹேப்பி மிஸ்டர் தீபன்!"

"ரெண்டு நாளா எனக்கு நல்ல ஜலதோஷம் பிடிச்சிருச்சு இனியா மேடம்!"

"அப்படியா? டாக்டர் கிட்டே காட்டினீங்களா? இந்த மேடம் கீடம்... வேண்டாமே ப்ளீஸ்! என்னை நீங்க இனியான்னே கூப்பிடலாம்"

"இல்ல, பிடிச்சது பிடிச்சது தான்! இனி போகாதுன்னு தோணுது இனியா"

"ஏன் இந்த முடிவுக்கு வந்துட்டீங்க? அந்தளவுக்கு கடுமையான கோல்டு பிடிச்சிருச்சா என்ன?" கரிசனத்துடன் அக்கறையுடன் சற்றே பதறியவளாய் கேட்டாள்.

"அப்பாவும் பொண்ணுமா மாறி மாறிப் புகழ்றீங்க! தலையில அப்டப்போ பெரிய ஐஸ் பாறையைத் தூக்கி வச்சுட்டிருந்தா... கடுமையா 'கோல்ட்' பிடிக்காம என்ன செய்யும்?

இதோ இங்கே ஜாயின் பண்ணிட்டேன். நிதமும் உங்களைப் பார்ப்பேன். அங்கே சுத்தி, இங்கே சுத்தி வந்து பாராட்டுப் பத்திரம் வாசிச்சுடறீங்க...

அதான் இந்த ஜலதோஷம் இனி போகவே போகாதுன்னு சொன்னேன். நான் சொன்னது சரிதானே இனியா?"

பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு தீபன் பேசியதும்.... கல கலவென்று சிரித்து விட்டாள் இனியா. அந்த நேரத்தில்... படாரென்று கதவைத் திறந்து கொண்டு சுனாமியின் சீற்றத்தோடு உள்ளே புகுந்தான் சுந்தர்.

# 11

"என்ன இனியா? எத்தனை நாளா நடக்குது இந்தக் கூத்து?" வந்ததும் வராததுமாக சுந்தர் நாக்கில் விஷத்தைத் தடவிக் கொண்டு கேட்ட கேள்வி... இனியாவின் மெல்லிய இதயத்தைக் கிழித்துக் கூறு போட்டது.



> பாடகி ரிஹானா உலகிலேயே அழகான வயிறு கொண்ட பாடகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாராம். ஒரு சாண் வயிற்றைக் கவர்ச்சிப் பொருளாக்கும் வேலை அங்கேயும் ஆரம்பமாகிவிட்டது போலும்!
>
> - க.ரவீந்திரன்

திகிலில் அவளது இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. "நான் உன் கிட்டே மனசு விட்டுப் பேசணும். இதோ வந்துட்டே இருக்கேன்னு... நான் ஃபோன் பண்ணிச் சொல்லியும்... நீ பாட்டுக்கு மரியாதையே இல்லாம கிளம்பிப் போயிட்டியே? என்கிட்டே பேசறதுக்கு உனக்கு அவ்வளவு கசக்குதா?

ஃபோன்லே பிறந்த நாளைக்கு வாழ்த்து தெரிவிச்சு பேசிட்டிருக்கும் போதே 'கட்' பண்றே... என்னை என்னத்துக்கு தவிர்க்கிறே?

யாரிவன்? இவனை வெளியே போகச் சொல்லு! உன் கிட்டே நான் தனியாப் பேசியாகணும்" ஊசிப் பட்டாசு போல் படபடவென்று பொரிந்தான் சுந்தர்.

நாசூக்காக எழுந்து நகர எத்தனித்த

தீபனை... இனியாவின் குரல் தடை செய்தது.

"நில்லுங்க தீபன்! நீங்க போகாதீங்க என்னை விட்டுட்டு... இங்கேயே இருங்க ப்ளீஸ்..."

"இனியா! திஸ் இஸ் டூ மச்! இவன் யாரு நமக்கு இடையில நிக்கிறான். நீ என்னோட ஃபியான்ஸி. கூடிய சீக்கிரம் எனக்கு மனைவியாகப் போறே! என் வார்த்தைக்கு மதிப்பு தரமாட்டியா? என்னை விட இவன் உனக்கு அவ்ளோ முக்கியமா போயிட்டானா? இவன்கிட்டே சிரிச்சு சிரிச்சு பேசிட்டிருக்கே... இவன் கிட்டே பேசிட்டிருக்கும் போது... உன் முகமே ஜொலிக்குதே?

உனக்கும் அவனுக்கும் எவ்ளோ நாளா கனெக்ஷன்?

இதெல்லாம் உங்கப்பாவுக்கு தெரியுமா? அங்க மாமா படுத்த படுக்கையா இருக்கிறாரு...! நீ இங்கே இவன் கூட கொட்டமடிச்சுகிட்டு இருக்கியே... உனக்கு வெட்கமாயில்லே?

ஏய்... மிஸ்டர்! நானும் அவளும் பெர்ஸனலா பேசிட்டிருக்கோம். இங்கே உனக்கு என்ன வேலை? கெட் அவுட் ஐ ஸே!"

"நிறுத்துங்க சுந்தர்! அவர் இந்த ஆபீஸ்லே புரொடக்ஷன் மேனேஜர். அவரை வெளியே போகச் சொல்றதுக்கு... உங்களுக்கு எந்த உரிமையும் இல்ல... அதிகாரமும் இல்ல..."

"உரிமையும் அதிகாரமும் எனக்கு இல்லையா? நமக்கு நிச்சயம் ஆயிடுச்சு. நீ என்னோட பாதி பொண்டாட்டி தெரியுமா?"

"நீங்க படிச்சவர் தானா? இவ்ளோ கீழ்த்தரமா பேசறீங்க சுந்தர்? உரிமையும் அதிகாரமும் உங்களுக்கு இல்லை தான். இன்னமும் நமக்கு கல்யாணமே ஆகலை. ஞாபகமிருக்கட்டும்"

"கல்யாணம் நடக்கத்தானே போகுது. இன்னமும் சில நாட்கள்லே தாலி கட்டி மூக்கணாங்கயிறு மாட்டத்தானே போறேன்? அதுலே எந்த மாற்றம் வந்துடப் போகுது? ஊருக்கெல்லாம் நாங்க இன்விடேஷனை விநியோகம் பண்ணி முடிச்சாச்சு! தாலி கட்ட வேண்டியது தான் பாக்கி!

இந்த மாதிரி தருணத்துல நீ இப்படி மானக்கேடா நடந்துக்கலாமா? நீயெல்லாம் நல்ல குடும்பத்துப் பொண்ணு தானா?"

"இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசினீங்கன்னா... மரியாதை கெட்டுடும் சுந்தர். வெட்கம் மானத்தைப் பத்தி நீங்க பேசறீங்களா? உங்களுக்கு அதைப்

அடுத்த இதழ்

– வெ. தமிழழகன்



எழுதிய

## உயிர் மீட்டும் வீணை...

**காதலுக்காகப் போராடும் கபிலா உங்கள் மனம் தொடுவாள்.**
**விறுவிறுப்பான காதல் நவீனம்**

பத்திப் பேசறதுக்கு அருகதை இருக்கா?

உங்களைப் பத்தி எனக்கு சகலமும் தெரிஞ்சு போச்சு. ஒரு பொம்பளைப் பொறுக்கி கிட்டே பேசறதுக்கு... எந்தப் பொண்ணுக்கும் விருப்பம் இருக்காது. தெரிஞ்சுக்கோங்க! எனக்கு உங்க மூஞ்சியில முழிக்கக்கூட அருவருப்பா இருக்கு. நான் உங்களை வெறுக்கிறேன். அதனால் தான் உங்களைத் தவிர்த்தேன். போதுமா?" சுட்டு விரலை நீட்டிப் பேசினாள் இனியா.

அழகிய விழிகளில் தீப்பொறி பறந்தது?

"என்னைப் பத்தி தெரிஞ்சு போச்சு இல்லே? ஆமாம்! நான் அப்படித்தான். என்ன பண்றதா உத்தேசம்? ஆம்பிளைங்க அப்படி இப்படி இருக்கத்தான் செய்வாங்க. அதைக் கண்டும் காணாததுமா... அவனுக்கு அடங்கி நடக்கிறதுதான்... ஒரு பொண்ணுக்கு அழகு! அதை விட்டுட்டு எனக்குப் போட்டி போட்டுக்கிட்டு... இவன் கூட கும்மாளம் போட்டுக்கிட்டிருக்கே?" கேட்டுக் கொண்டே அருகில் நெருங்கி வந்தவனது கோபம்... உச்சிக்கு ஏறியதால் இனியாவின் புஜத்தில் கை வைத்து நெட்டித் தள்ளினான்.

வீலென்று அலறிக் கொண்டு தடுமாறி விழப் பார்த்தவளை... சட்டென்று தாங்கிக் கொண்டான் தீபன்.

"யூ பிளடி ஸ்கௌண்ட்ரல்! ஒரு பொண்ணுன்னு கூடப் பார்க்காம இப்படி மிருகத் தனமா நடந்துக்கிறியே? நீ எல்லாம் ஒரு மனுஷனா?

உங்க பெர்ஸனல் மேட்டராச்சேன்னு... இது வரைக்கும் குறுக்கே வராம பல்லைக் கடிச்சுட்டிருந்தேன். இதுக்கு மேலே ஒரு இஞ்ச் நீ நகர்ந்து வந்தா..

வெட்டிடுவேன். ஜாக்கிரதை!" எச்சரித்து விட்டு இனியாவின் முகத்தை மிருதுவாகத் தட்டினான்.

"இனியா! உங்களுக்கு ஒண்ணுமில்லையே? ரிலாக்ஸ் இனியா! நான் உங்க கூடவே இருக்கேன். பயப்படாதீங்க" பயத்திலும் திகிலிலும் தொப்பலாக வியர்த்து வழிந்தவளைத் தேற்றினான்.

வாட்ட சாட்டமாக ஆஜானுபாகுவாக இருந்த தீபன்... எரிமலையாய் குமுறி எச்சரித்ததும்... சுந்தர் வெல வெலத்து தான் போனான்.

இதயம் எகிறி தொண்டைக்குள் வந்து விடும் போன்ற திகில் உணர்வில் ஆடிப் போயிருந்த இனியா... தீபன் தன்னை விழாமல் தோளில் தாங்கியபடி சுந்தரை மிரட்டியதும்... மெல்ல சகஜ நிலைக்குத் திரும்பினாள்.

"ரிலாக்ஸ் இனியா!" என்று தீபன் பதறியபடி வியர்வையைத் துடைத்தபோது... அவளுக்கு விலகத் தோன்றவில்லை. தோளில் சாய்ந்தபடியே சுந்தரை உறுத்துப் பார்த்தாள்.

"உன் யூகம் சரிதான் சுந்தர்! தீபன் நேர்மையானவர். முக்கியமா ரொம்ப ரொம்ப கண்ணியமானவர். எனக்கு அவரை ரொம்பவே பிடிச்சிருக்கு.

எஸ்! ஐ லவ் ஹிம்! அது நிஜம் தான். நான் இவரை என் உயிருக்கும் மேலாக நேசிக்கிறேன். என்ன செய்யப் போறே சுந்தர்? உன் மேட்டரைப் பத்தி நான் என் அப்பா கிட்டே சொல்லாம ஏன் மறைச்சேன் தெரியுமா? ஏற்கனவே 'மைல்ட் அட்டாக்'லே விழுந்து பிழைச்ச மனிதர் அவர்... இந்த அதிர்ச்சி அவரது உயிருக்கே உலை வச்சுட்டா என்ன பண்ணுதுன்னு பயம்!

ஆபீசுக்குள்ளே நுழைஞ்சு தகாத வார்த்தை பேசி என்னை நோகடிச்சு அராஜகம் பண்றியே? இந்த விஷயம் எங்கப்பா காதுக்கு எட்டினா... என்ன நடக்கும் தெரியுமா?

செத்தாலும் சாவேனே தவிர உனக்கு கழுத்தை நீட்ட மாட்டேன். தெரிஞ்சுக்கோ"

"நீ எதுக்கு ராஜாத்தி சாகணும்? அப்பா நானிருக்கையில் உனக்கு ஒரு குறையும் வராதுடா"

குரலைக் கேட்டு மூவரும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தனர்.

கதவருகே சாய்ந்து நின்று... மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிய படி இருந்தார் சிவராமன். நடந்த களேபரத்தில் அவர் எப்போது உள்ளே

நுழைந்தார் என்பதை... யாருமே கவனிக்கவில்லை!

"அ... அப்பா!" விம்மியபடி இனியா ஓடிச் சென்று அவரது நெஞ்சில் தலைசாய்த்து கண்ணீர் உகுத்தாள்.

"அழாதேடா... எனக்கு இவனைப் பத்தி... நிச்சயத்துக்கு மறுநாளே தெரிஞ்சு போச்சு. ரொம்பப் பழகின நபர் ஒருத்தர் மூலமா விஷயம் தெரிஞ்சதும் ஆடிப் போயிட்டேன். அந்த அதிர்ச்சியில தான் 'அட்டாக்' வந்துடுச்சு.

எப்படியோ மீண்டு வந்ததும்... நம்பகமான நபர்கள் மூலமா இவனைப் பத்தின விவரங்களை சேகரிச்சேன். இவன் நல்லவனில்லை அப்படின்னு ஊர்ஜிதமா தெரிஞ்சதும்... நான் என்னையே நொந்துகிட்டேன்.

என் வாழ்நாள்லே நான் எடுத்த முடிவுகள் எதுவும் தப்பானதேயில்லை. இவன் விஷயத்துல தான்... நான் முதன் முறையா தோத்துப் போயிட்டேன்.

இந்தக் கல்யாணத்தை நிறுத்தணும்கிற முடிவுக்கு... நான் என்னிக்கோ வந்துட்டேன். அதனால்தான் பத்திரிகைகளை நான் விநியோகிக்கவே இல்லை. நிச்சயம் முடிஞ்ச அன்னிக்கே பத்திரிகை அச்சடிக்க கொடுத்திருந்தேன் இல்லையா?

இவன் என்னோட சொந்த தங்கை மகன் வேற? தக்க தருணத்துல உறவுக் காரங்களுக்கும் ஊர்க் காரங்களுக்கும் கல்யாணத்தை நிறுத்தற விஷயத்தை சொல்லிடலாம்னு தான் இருந்தேன். கல்யாணம் வரைக்கும் வந்துட்டு நின்னு போனா... அது உன்னை பாதிக்குமேன்னு பயந்தேன்.

உன்னை ஒரு நல்லவன் கையில பிடிச்சுக் கொடுத்தாகணுமே? இப்போ அந்தக் கவலையும் தீர்ந்தாச்சு!

சுந்தர்! இதுக்கு மேல உன் வாலை நீ சுருட்டிக்கலைன்னா... நான் ஐ.ஜி.கிட்டே புகார் பண்ணுவேன்.

ராஸ்கல்! என் கண் முன்னால நிக்காம ஓடிப் போயிடு... சாக்கடையில புரண்ட அற்ப மிருகம் நீ... என் பொண்ணு இருக்கிற திசைப்பக்கம் தலை வச்சுப் படுக்காதே... போயிடு" தலை குனிந்தபடி வெளியேறினான் சுந்தர்.

"அப்பா! நீங்க எப்படிப்பா கரெக்டா இங்க வந்தீங்க?" திகைத்தபடி கேட்ட மகளின் கூந்தலை வருடியவர்... மெல்ல தீபனை ஏறிட்டார்.

"ரொம்ப போரடிச்சுது! தீபன் இன்னிக்கு முதன் முறையா 'ஜாயின்' பண்றார் இல்லையா? அந்த நேரத்துல நாமளும் ஆபீஸ்லே இருந்தா... நல்லா இருக்குமே அப்படின்னு தோணிச்சு. கார்லே கிளம்பி வந்தேன்.

தீபன்! என் பொண்ணோட மனசைப் புரிஞ்சுகிட்டீங்கல்ல? நான் பாச பந்தத்திற்கு அடிமையானவன். பாசத்திற்கு ரொம்பவே ஏங்கறவன். என் மகன் ரகு தான்... என்னைப் புரிஞ்சுக்காம தனியா பிரிஞ்சு போயிட்டான்.

இனியாவை விட்டா... எனக்கு யாருமில்லை. இன்னிக்கு நாள் நல்லாயிருக்கு. சாயந்தரமே பெரியவங்களை அழைச்சுகிட்டு வந்து பொண்ணு கேளுங்க... அதே நாள்லே, அதே முகூர்த்தத்திலே உங்க கல்யாணம் நடக்கணும்.

கல்யாணத்துக்கு அப்புறம் எல்லோரும் ஒரே வீட்டுல இருக்கணும். நீங்களும் இனியாவும் சந்தோஷமா அமோகமா இருக்கிறதை. பெரியவங்க கண்குளிரப் பார்த்து சந்தோஷப்படணும். இந்த வயசான சினேகிதனோட ஆசையை நிறைவேத்துவீங்கன்னு நான் நம்பறேன் தீபன்! உங்க முடிவை இனியா கிட்டேயே சொல்லுங்க. நா வரேன்" தழுதழுத்தபடி பேசி விட்டு நாசூக்காக வெளியேறினார் சிவராமன்.

"தீபன்! என்ன பேசாம இருக்கீங்க? ஒரு பொண்ணாயிருந்தும் வெட்கத்தை விட்டுட்டு... மனசைத் திறந்து எல்லாத்தையும் நான் சொல்லிட்டேன்.

நீங்க இன்னமும் முடிவைச் சொல்லலையே?" அவனது விழிகளை ஊன்றிப் பார்த்தாள் இனியா.

"என்னிக்கு உன்னைப் பார்த்தேனோ... அப்பவே நான் நானாகவே இல்லை இனியா! சதா உன் ஞாபகம் தான்... அந்தஸ்து பேதம் நம்மைப் பிரிச்சுடுமோன்னு பயந்தேன். மாமாவோட தயாள குணமும் பரந்த மனப்பான்மையும் நம்மை சேர்த்து வச்சுடுச்சு.

கண்ணை மூடினா கனவிலேயும் உன் முகம் தான்! நினைவிலேயும் உன் முகம் தான்! நீ கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும். ஐ லவ் யூ!"

"உங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே... குணம் தெரிஞ்சு போச்சே? எனக்கும் சதா உங்க நினைப்பு தான்! ஐ டூ லவ் யூ தீபன்" குங்குமப்பூவாய் முகம் சிவக்கக் கூறியவளின் கரத்தை இறுகப் பற்றினான் தீபன்.

முற்றும்

சிறுகதை

# கைவிளக்கு

- வெ.தமிழழகன்

மகள் மல்லிகா கட்டிக் கொண்டிருந்த புத்தம் புது புடவையைப் பார்த்து அதிர்ந்தாள் பூவாயி. அவளுக்கு இந்த புடவை மகளிடம் வந்ததற்கான வழியொன்றும் பிடிபடவில்லை. காரணம்... அவளது குடிகாரக் கணவன் நாவப்பன்தான்.

வீட்டில் எந்தப் பொருள் வைத்திருந்தாலும் அதை எடுத்துச் சென்று சாராயக் கடையில் கொடுத்து அதற்கு பதிலாக சாராயம் குடித்துவிடுவான். அவளது நகை, கொலுசு, புடவை, பித்தளை போவுணி, வெள்ளிக் காப்பு என எத்தனையோ பண்டங்களைத் தூக்கிச் சென்று சாராயக் கடையில் கொடுத்தே வீடு வெறிச்சென்று இருந்தது: அவள் வாழ்க்கையைப்போல.

நாவப்பன் பூவாயி வாழ்க்கையின் அடையாளமாய் நல்லதங்காளைப்போல ஆறேழு பெண் குழந்தைகளைப் பெற்றுவிட்டு: இப்போதும் சுமைதாங்கியாய் பிரசவ நாளை எதிர்நோக்கிக் காத்திருக்கிறாள் பூவாயி. அவள் கணவனுக்கு ஆண் பிள்ளை வேண்டுமாம். அடுத்தது பையனாக இருக்குமோ என்று எதிர்பார்த்து எதிர்பார்த்தே எல்லாம் பெண் பிள்ளையாய் பிறந்துவிட்டன.

மகள் மல்லிகாதான் மூத்தவள். அவளைத் தொடர்ந்து ஒவ்வொரு பெண்ணாய் சமைந்து வாழ்க்கை பொறுப்புகளை ஏற்கத்தக்க பருவங்களில் கனவுகளோடு காத்திருக்கின்றனர். எனினும் இரவுகளில் அந்த வீட்டில் நடக்கும் மௌன யுத்தத்தின் வீரிய ரணங்கள் இவர்களது பருவத்தை மிகவும் புண்படுத்தும். உறக்கம் வராத அந்த நரகங்களைப் பற்றி அவர்களது அம்மாவோ, அப்பாவோ கவலைப்படுவதாக இல்லை.

குடும்பக்கட்டுபாடு செய்துகொள் என்று தாயிடம் சொல்வதை வெட்கக்கேடாக நினைத்தே மௌனமாகிவிட்டாள் மல்லிகா. பசியான வயிறுகள் பானையின் வெறுமையைத் துழாவின. பருவங்கள் மாறி மலர்ந்துவிடும் பொழுது வயிற்றுக்கு மட்டுமா பசிக்கிறது? என யோசித்த மல்லிகா கூடப் பிறந்த பெண்களுக்காக கவலைப்பட்டவளாய் நூல் குடோனுக்கு கணக்கு எழுதப் போனாள். சொற்ப சம்பளத்தை வாங்கி சோற்றுக்கும், அம்மாவின் மருத்துவச்

TECHSATISH.NET TECHSATISHFAN

செலவுக்குமாக கரைத்தாள்.

தன்னைப் பற்றியோ, தன் எதிர்காலம் பற்றியோ கவலைப்படயாருமில்லாத இந்த உலகத்தில் எதையும் தானே நிர்ணயப்படுத்தி தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டாள் மல்லிகா.

குடோனின் முதலாளி மகன்தான் செல்வம். அவளைப் பற்றி பேசி வாஞ்சையாய் ஆறுதல் சொல்வதில் துவங்கிய நட்பிற்கு பரிசாக புடவைகளும், நகைகளும் அவ்வப்போது பணமும் கொடுத்து மல்லிகாவை வளைத்துப் போட்டான் செல்வம். ஆறுதலற்று விசும்பிக் கொண்டிருந்த அவளது பருவ மனம் அவனது ஆதுரம் கிடைக்கப் பெற்றதும் கிளுகிளுப் படைந்தது.

தனக்கும் ஒரு துணை கிடைக்கப் பெற்றதில் மிகவும் மகிழ்ந்தாள் மல்லிகா. அவனிடம் அவள் பெற்ற அந்த புத்தம் புது புடவை எது என்று அவள் அறியமாட்டாள். அவளுக்காக வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சேமித்து வைத்த பணத்தில் அந்தப் புடவையை வாங்கி மல்லிகாவுக்காக வைத்திருந்தாள் பூவாயி. அதைத் தூக்கிச் சென்று சாராயக்கடையில் கொடுத்து குடித்துவிட்டான் நாவப்பன்.



சாராயக் கடை முதலாளியின் மகன்தான் செல்வம். தனது அப்பா அன்றாடம் கிடைக்கின்ற பொருள்களை வீட்டின் அலமாரியில் வைத்திருப்பான். அதில் தனக்கு தேவையானதை எடுத்து வந்து பரிசாகக் கொடுத்துவிட்டு அதற்கான பலனை அடைவதை வழக்கமாகக் கொண்டிருந்தான் செல்வம்.

அம்மா வாங்கிய புடவை அப்பா மூலமாக சாராயக் கடைக்காரனுக்கு சென்று அவனது மகன் மூலமாகவே மல்லிகாவிற்கு கிடைத்திருக்கிற ரகசியமும், அந்த ரகசியத்தால் ஏற்பட்டிருக்கின்ற ரணமும் பூவாயி ஒருத்தியால் மட்டுமே உணரமுடிந்த உண்மை. இதை வெளிப்படையாக எப்படிக் கேட்பது எனப் புரியாமல் தவித்தாள் பூவாயி. அன்று முதல் மகளை மிகவும் கூர்ந்து நோக்கி வந்தாள்.

மல்லிகாவிடம் மன அளவிலும் உடலளவிலும் மாற்றங்கள் பல ஏற்பட்டிருப்பதை அறிந்து தொண்டைக்குள் நெருப்பு விக்கியதைபோல துடித்தாள் பூவாயி. முகம் மெருகேறி ஒருவிதமான திண்மை பொங்கத் தெரிந்தாள். ஒரு நாள்... திடீரென வாந்தியும் மயக்கமுமாய் கொல்லையில் கிடந்தாள். அவள் முகத்தில் நீர்தெளித்து மயக்கம் கலைத்து,

"ஏய் மல்லிகா, உனக்கு என்னாச்சு? என்னடி ஆச்சு? உண்மையை சொல்லு." என்று அவளை உலுக்கினாள்.

"எ... எனக்கு ஒன்றுமில்லம்மா. வயிறு சரியில்லை." என்று தட்டுத் தடுமாறியபடி சொன்னாள் மல்லிகா.

"தெரியுண்டி வயிறு சரியில்லாம இருந்திரக்கூடாதே என்கிற கவலையில்தான் கேட்டேன். உண்மையைச் சொல்லு. நானும் வருஷம் தவறாமல் மசக்கையை அனுபவிக்கிறவள்தானே? உனக்கு வந்திருக்கறது மசக்கை மயக்கம்தானே." என்று கவலையுடன் கேட்டாள் பூவாயி.

"ஆமம்மா மசக்கை மயக்கம்தான் இது. குடோன் முதலாளியோட மகனுக்கும் எனக்கும் காலகாலத்துல நடக்க வேண்டியது காலநேரம் ஏதும் இல்லாத நடந்து போச்சு. இதுக்கு காரணம் யாரு? நீதான். நீயும் உன் புருஷனுந்தான். பையன் வேணும் பையன் வேணும்னு பாய சுருட்டாம இருந்தீங்களே. வயசுக்கு வந்த பொண்ணுங்கள பத்தி ஒரு நிமிஷம் யோசிச்சு. பாத்தீங்களா? இல்லையே!"

"....."

"இப்போ பாத்தீங்களா. தாயும் தாயாகியிருக்கா. மகளும் தாயாகியிருக்கா. இதுல யாருக்கு யார் பிரசவம் பாக்கறது என்கிற கவலையோடதான் அழுறியா?" என்று மல்லிகா கேட்க.

"அடிப்பாவி வேலைக்கு போறேன்னு சொல்லிட்டு வேண்டாததை வயித்துல வாங்கிட்டு நிக்கிறியே கண்மேல தவறிவிழுந்தா கைவிளக்கும் சுடத்தாண்டி செய்யும். யாரடி அவன்?" என்று மகளின் தலைமுடியை பிடித்து உலுக்கினாள் பூவாயி. தன் மனசுக்கு தெரிந்த

ரகசியத்தை அவள் தன் தாயிடம் கூட சொல்லாமல் மௌனம் சாதித்தாள்.

காலம் யாருக்காக காத்துக் கொண்டிருக்கிறது? ஊரெல்லாம் அவளை பார்த்து கேவலமாக பேசத் துவங்கியது. புருஷன் இல்லாம புள்ளை பெத்துகிற ஒரே ஒரு கேடுகெட்ட ஜென்மம் இவளாதான் இருப்பா என்று இவள் காதுபடவே பேசியபோது உயிரே போவதுபோல் துடித்துப்போவாள். எனினும் என்ன செய்ய?

அன்று இரவு நல்ல மழை நேரம். மல்லிகாவிற்கு இடுப்பு வலி பிடித்துக் கொண்டது. வலி தாளாமல் துடியாய் துடித்தாள் மல்லிகா. நிறைமாத கர்ப்பிணியாய் இருக்கும் அவளது அம்மா பூவாயி வேறெங்கும் ஓடியாடி உதவ முடியாமல் தவித்தாள். நாட்டு மருத்துவச்சி நல்லம்மாவை அழைத்து வந்து அவளுக்கு பிரசவம் பார்த்தாள். குழந்தை பிறந்துவிட்டது. ஆனால் மல்லிகா ஜன்னி கண்டாள். தன் தாயை உடன் அழைத்து.

"அம்மா வீடு நிறைய பெண்கள் இருந்து ஆண் வாரிசு வேணும்னு ஆலாய் பறந்தீங்க. ஆனா ஆண்டவன் அதை உங்களுக்கு கொடுக்கல. ஆண் துணை வேணும்னு நான் எதிர்பார்த்தப்போ அதுவும் எனக்கு கிடைக்கல. ஆனா உனக்கு கிடைக்காத வாரிசு எனக்கு கிடைச்சிருக்கு. அதை உங்களுக்கே ஒப்படைச்சிடுறேன். உங்க குழந்தையா ஆளாக்குங்க" என்ற சொல்லி மலர்ந்த முகத்துடன் கண்களை மூடிக் கொண்டாள் மல்லிகா.

***

**இ**ந்திய நகை வடிவமைப்பாளர் பூனம் சோனி வடிவமைத்த நகை ஒன்றிற்கு உலகளாவிய காப்புரிமை கிடைத்துள்ளது. இத்துறையில் இந்தியர் ஒருவருக்கு இச்சிறப்பு கிடைப்பது இதுவே முதல் முறையாகும்.

– க.ரவீந்திரன்



# பொய் சொல்ல போறோம்

**ரி**யல் எஸ்டேட் ஆசாமிகளில் சிலர் மோசடிப் பேர்வழிகளாக இருப்பதும், நிலம் வாங்கி, சொந்த வீடுகட்டத் துடிக்கும் நடுத்தர மக்களை தாதாக்களும் புரோக்கர்களும் எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்பதும்தான் கதை.

நெடுமுடி வேணு, தன் ரிட்டயர்மெண்ட் மூலம் கிடைத்த பணத்தில் புறநகர்ப் பகுதியில் ஒரு கிரவுண்ட் நிலம் வாங்குகிறார். அதில் வீடு கட்டலாம் என்று பூமி பூஜை செய்யப் போகும் போது, அங்கே வேறு ஒருவர் காம்பவுண்ட் சுவர் எழுப்பியிருப்பதைக் கண்டு பதறுகிறார். ரவுடி மிரட்டுகிறான். புரோக்கர் விம்.எம்.சி.ஹனீபாவிடம் போனால், 'விற்றதோடு எங்கள் வேலை முடிந்தது. நிலத்தை நீங்கள் தான் பாதுகாத்திருக்க வேண்டும்' என்கிறார். பிறகு, 'சமாதானமாகப் போவது நல்லது. 15 லட்சம் கொடுத்தால் அந்த தாதாவிடம் பேசி, நான் நிலத்தை மீட்டுத் தருகிறேன்' என்கிறார்.

கோபத்தோடு வரும் வேணு போலீஸ், மனித உரிமை அமைப்பு, அமைச்சர் என்று எங்கெங்கோ போய், முட்டி மோதிப் பார்க்கிறார். கெஞ்சுகிறார். பணம் இல்லாது வேலை நடவாது என்கிற நிலையில், நாசரை ஏமாற்ற அரசு நிலத்தைக் காட்டி, அதை விற்பதுபோல் நாடகமாடி, பணத்தைக் கறந்து, தங்கள் நிலத்தை மீட்கிறார்கள்.

நடுத்தர வர்க்க குடும்பத் தலைவராக நெடுமுடி வேணு வாழ்ந்து காட்டுகிறார். அமெரிக்கக் கனவில்



மிதக்கும் கார்த்திக், தம்பி ஓம், துபாய் பணக்காரராக வேஷம் போடும் மவுலி, அவர் மகளாக வரும் வரு புதுமுக அழகி பியா, மகனாக வரும் பாலாஜி, நாசரை ஏமாற்ற ஐடியா வழங்கி உதவும் பாஸ்கி என எல்லோரும் மனம் தொடுகிறார்கள் என்றால், நகைச்சுவை வில்லன் வேடத்தில் கலக்கும் நாசர் நிலத்தை மட்டுமல்ல, ரசிக மனங்களையும் ஆக்கிரமிக்கிறார் எனலாம்.

காமெடி கலந்து சொல்லப்பட்ட கனமான கதை.

– **பவானி மைந்தன்**

*அட்டையில்:* **மல்லிகா கபூர்**

சிமிழ் : *586* *1-10-2008* மாதமிருமுறை

*குங்குமம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட்டிற்காக சென்னை-600 096, பெருங்குடி, நேரு நகர், முதல் பிரதான சாலை, பிளாட் எண்.170, எண்.10, தினகரன் அச்சகத்தில் அச்சிட்டு, சென்னை - 600 004, மயிலாப்பூர், 229, கச்சேரி ரோடு என்ற முகவரியிலிருந்து வெளியிடுபவர்:* **எஸ்.செல்வம்,** *ஆசிரியர்:* **பராசக்தி,** *கடிதங்கள், படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி: 229, கச்சேரி சாலை, சென்னை-600 004.*